# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 24 திங்கட்கிழமை (10.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 318


## 2ஆம் லெப். மாலதி நினைவுநாளும் மகளிர் தினமும் இன்று அனுஷ்டிப்பு



கோப்பாய்,ஒக்.10

முதல் பெண் மாவீரர் இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் 18ஆவது நினைவுதினமும் தமிழீழ மகளிர் எழுச்சி நாளும் இன்று தமிழர் தாயகத்திலும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் வாழும் இடங்களிலும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது.

குடாநாட்டில் இரண்டாம் லெப். மாலதியின் பிரதான நினைவு நிகழ்வு கோப்பாய் - கைதடி வீதியில் அவர் வீரச்சாவடைந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இடம்பெறும்.

இதனையொட்டி மாவீரர் மாலதியின் திருவுருவப்படம் கோப்பாய் சந்தியிலிருந்து ஊர்வலமாக நினைவுத்தூபிக்கு எடுத்துச்செல்லப்படும். அங்கு நினைவுநிகழ்வு இடம்பெறும். கிளிநொச்சியில் காலை 9.30 மணிக்கு இரணைமடுச் சந்தியில் மாலதி உருவச்சிலை அமைந் (16 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட குடும்பஸ்தர் காயங்களுடன் நேற்று மீட்பு!

கரவெட்டி,ஒக்10

பருத்தித்துறை, அல்வாய் வடக்கில் இரவு நேரம் கடத்தப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலத்த தாக்குதலுக்கு இலக்கான நிலையில் மீட்கப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். அவருக்கு இராணுவப் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதேயிடத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் சந்திரகுமார் (வயது 27) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே தாக்குதலுக்கு இலக்கானவராவார்.

தம்பசிட்டியில் உள்ள மதுபானசாலை ஒன்றில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இனந்தெரியாதவர்களால் இவர் கடத்தப்பட்டிருந்தார்.

நெஞ்சிலும், கையிலும் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்ட காயங்களுடன் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில், மாயக்கை வயல் பகுதியில் பற்றைக்காட்டுக்குள் இருந்து நேற்றுக் காலை இவர் உறவினர்களால் மீட்கப்பட்டார். (ஓ-3-15-70-173-204)

# புலிகள் விவகாரம் குறித்து ஆராய ஐரோப்பிய ஒன்றியம் கூடுகின்றது

## சர்வதேசப் பார்வையாளர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கும் திட்டம்

கொழும்பு,ஒக்ரோபர் 10

விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பில் தொடர்ந்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் உட்படப் பல்வேறு விடயங்களை ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றிய சபை அடுத்த இரண்டு வாரங்களில் மீண்டும் கூடவிருக்கின்றது.

இதேவேளை, சர்வதேசப் பார்வையாளர்கள் மூலம் இலங்கை நிலைமை குறித்து சுயாதீன அவதானிப்பு ஒன்றைப் பெறவும் ஐரோப்பிய ஒன்றியம் முஸ்தீபு செய்து வருவதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பு செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவலை வெளியிட்டன.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு சர்வதேச ரீதியில் மேற்கொண்டுவந்த பரப்புரை மற்றும் முறைப்பாடுகளை அடுத்து விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் தமது நாட்டுக்கு வரும்போது அவர்களை வரவேற்பதில்லை என்ற முடிவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வந்தது. எதிர்காலத்தில் பயங்கரவாதச் செயல்களைக் கைவிடுவதை வார்த்தையிலும் செயலிலும் நிரூபிக்காவிட்டால் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தடைசெய்வது குறித்தும் ஆராயப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துமிருந்தது.

இந்த நிலையிலேயே மேல் நடவடிக்கை (16 ஆம் பக்கம் பார்க்க)

## இயன்மார்ட்டின் மட்டக்களப்புக்கு நேற்று விஜயம்

பட்டிருப்பு,ஒக்.10

இலங்கை வந்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆலோசகர் இயன்மார்ட்டின் நேற்றுக்காலை மட்டக்களப்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அவருடன் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி மொங்கோலனும் சென்றிருந்தார்.

தனது விஜயத்தின் முதல் நிகழ்வாக இயன் மார்ட்டின் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்து மாவட்டத்தின் தற்போதைய நிலைமை பற்றிக் கலந்துரையாடினார்.

அதனையடுத்து, மட்டக்களப்பு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினார்.

தொடர்ந்து ஆழிப்பேரலை அனர்த்தத் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பதவிகளை இன்று இ.தொ.கா. ராஜினாமாச் செய்யும்

கொழும்பு,ஒக்.10

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மத்திய அரசில் வகிக்கும் அமைச்சுப் பதவிகளை இன்று இராஜினாமாச் செய்யும் என்று உறுதியாகத் தெரிகிறது. எனினும், மாகாண சபைகளில் அக்கட்சி வகிக்கும் பதவிகளை இப்போது இராஜினாமாச் செய்யாது எனத் தெரியவந்துள்ளது.

அதேவேளை, இ.தொ.காவின் உப தலைவரும் உல்லாசப் பயணத்துறைகள் பிரதி அமைச்சருமான பைசல் முஸ்தபா தனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்யமாட்டார் என்று தெரிகிறது.

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று ஜனாதிபதியைச் சந்திக்கின்றனர். இந்தச் சந்திப்பின்போது, தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சர் முத்து சிவலிங்கமும், பிரதி அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமியும் தமது இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளனர்.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாள (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு தலைமை அலுவலகம் திருகோணமலையில் இன்று திறப்பு!

கொழும்பு, ஒக்.10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அலுவலகம் இன்று திருமலையில் திறந்து வைக்கப்படுகிறது. திருமலை நகரின் சுங்க வீதியில் இந்தப் புதிய அலுவலகம் அமைந்துள்ளது. திறப்பு விழா நிகழ்வுக்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமை தாங்குவார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22பேரும் நிகழ்வில் கலந்துகொள்வர் என கூட்டமைப்பின் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் கூறுகையில்:-

''தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி முடிவெடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் ஏதேனும் ஓர் இடத்தில்தான் இதுவரை சந்தித்துக்கொண்டோம். இப்போது கூட்டமைப்புக்கென தனியான ஒரு தலைமையகம் அமைக்கப்பட்டுள்ளது. இது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மிகவும் உதவியாய் அமையும்''

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் அலுவலகங்களை மூட ஜே.வி.பிக்கு பொலீஸ் உத்தரவு

கொழும்பு, ஒக்.10

ஜனாதிபதித் தேர்தலையொட்டி ஜே.வி.பியினர் அமைத்த பிரசார அலுவலகங்கள் அனைத்தையும் உடனடியாக மூடிவிடும்படி பொலீஸ் மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார். தவறினால் தேர்தல்கள் அத்துமீறல் சட்டத்தின்கீழ் அக்கட்சிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

மக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.ஆதரவளிக்கிறது. இதனால், நாட்டின் பல பாகங்களிலும் தேர்தல் பிரசார அலுவலகங்களைத் திறந்துமஹிந்தவுக்கு ஆதரவாக தீவிர பிரசாரங்களில் அக்கட்சியினர் ஈடுபட்டுள்ளனர்.

இது ஜனாதிபதித் தேர்தல்கள் தொடர்பான 1981ஆம் ஆண்டின் 73 ஆவது சட் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவன்ஸவைக் கைது செய்யக்கோரும் மனு மீதான விசாரணை இன்று நடைபெறும்!

கொழும்பு, ஒக்.10

ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவைக் கைதுசெய்யும்படி பொலீஸ்மா அதிபருக்கு உத்தரவிடக்கோரும் மனு இன்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

1987ஆம் ஆண்டிற்கும், 1992 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலங்களில் 6 ஆயிரத்து 557 மனிதப்படுகொலைகளுடன் தொடர்புபட்டிருந்தார் என்றும் -

போக்குவரத்துச் சபை பஸ்கள் 613, ரயில் பெட்டிகள் 16, இ.போ.ச. டிப்போக்கள் 16, கிராம சேவகர் அலுவலகங்கள் 294 மற்றும் 79 பிரதேச செயலகங்கள் என்பவற்றை தீவைத்துக்கொளுத்தி பல கோடி ரூபா பெறுமதியான தேசிய சொத்துகளை நாசப்படுத்தினார் என்றும் -

விமல் வீரவன்ஸ மீது குற்றஞ்சாட்டி அவற்றுக்காக அவரைக் (16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாக்., இந்தியாவை உலுக்கிய நிலநடுக்கத்தில் இறந்தவர் எண்ணிக்கை 20 ஆயிரமாக உயர்வு!

இஸ்லாமாபாத்,ஒக்.10

பாகிஸ்தானை மையமாகக்கொண்டு நேற்றுமுன்தினம் காலை 9.50 மணியளவில் ஏற்பட்ட பயங்கரப் பூகம்பத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

மீட்புப் பணிகளுக்கென பல்வேறு நாடுகளில் இருந்தும் உதவிப்பொருள்களுடன் மீட்புப் பணியாளர்கள் பாகிஸ்தான் மற்றும் இந்தியா நோக்கி சென்றவண்ணமுள்ளனர்.

அதேவேளை, இச்சோகச் சம்பவத்துக்கு ஐ.நா. பொதுச்செயலர் கோபி அனான் உட்பட உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானை மையமாகக்கொண்டு ஏற்பட்ட இந்த பூகம்பம் இந்தியா, ஆப்கானிஸ்தான்ஆகிய நாடுகளையும் மோசமாகத் தாக்கியது. பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் கட்டுப்பாட்டுக் காஷ்மீரில் நேற்றுமுன்தினம் அடுத்தடுத்து நிலம் குலுங்கியது. ரிச்டர் அளவில் 7.6 புள்ளியாக இது பதிவாகியது.

பூகம்பத்தில் சிக்கி ஏராளமான கிராமங்கள் இடிபாடுகளுக்குள் அடியோடு புதையுண்டு போயுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ராவல்பிண்டி நகரில் இரண்டு பாடசாலைகள் இடிந்து வீழ்ந்தன. நீதிமன்றம் ஒன்றும் இடிந்து வீழ்ந்தது. இவற்றில் சிக்கி பலர் உயிரிழந்தனர். பல கிராமங்கள் அடியோடு அழிந்துவிட்டதால் அதில் வசித்தவர்களின் சரியான தொகையைக் கணக்கிடமுடியாமல் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப், பாகிஸ்தான் பிரதமர் சௌகாத் அஸீஸ் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அடுத்து இரண்டு நாள்களுக்கு பூகம்ப அதிர்வு தொடரும் என்பதால் மக்களைப் பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறு பாகிஸ்தான் வானிலை மைய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர் பகுதியிலும் பூகம்பத்தின் தாக்கம் காரணமாக பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

ஜம்மு-காஷ்மீரில் 8 முறை தொடர்ந்து அதிர்வுகள் உணரப்பட்டன.

வட காஷ்மீரின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் இராணுவத்தினரின் பதுங்குகுழிகளும், இராணுவக் குடியிருப்புகளும் பெருமளவில் அழிவுக்குள்ளாகின.




பூகம்பம் இடம்பெற்றவேளை சண்டிகரில் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யும் முதலமைச்சர்களின் மாநாடு நடைப்பெற்றுக் கொண்டிருந்தது. அதில் பங்கேற்ற இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், கட்சித் தலைவி சோனியாகாந்தி ஆகியோர் மாநாட்டு அரங்கிலிருந்து அவசரமாக வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஜம்மு - காஷ்மீர் பகுதியில் 120 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட கடுமையான பூகம்பம் இதுவென பூகம்ப கண்காணிப்பு நிலைய உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். இப்பூகம்பத்தின் தாக்கம் ஆப்கானிஸ்தானிலும் உணரப்பட்டது. கிழக்கு ஆப்கானிஸ்தான் மாநிலமான நான்கர்ஹரில் பலவீடுகள் தரைமட்டமாகின. பலர் உயிரிழந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இங்கு குறைந்தது 30 பேர் வரை உயிரிழந்துள்ளனர்; பலர் காயமடைந்தனர்.



*பூகம்பம் காரணமாக பாகிஸ்தானில் 19 மாடிக் கட்டடம் ஒன்றும் இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் வீடு ஒன்றும் தகர்ந்து இருப்பதையும் இவ்வனர்த்தத்தில் தமது உறவுகளை இழந்தவர்களின் துயரத்தையும் படங்களில் காணலாம்.*

# ஆள்சேர்ப்புக்கு அல் - கெய்டா இணைய தளத்தில் விளம்பரம்!

துபாய், ஒக்.10

சர்வதேச தீவிரவாத அமைப்பான அல்-கெய்டா தமது இயக்கத்துக்கு ஆள்களைச் சேர்ப்பதற்காக இணையத்தளத்தில் விளம்பரம் வெளியிட்டுள்ளது.

இணையத்தள சேவையை கடந்த சில ஆண்டுகளாக அல் - கெய்டா உள்ளிட்ட முஸ்லிம் தீவிரவாத அமைப்புகள் பலவும் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றன.

இந்நிலையில், தங்கள் அமைப்பை மேலும் பலப்படுத்துவதற்காக முஸ்லிம் இளைஞர்களை நோக்கி அல் - கெய்டாவுடன் தொடர்புடைய 'குளோபல் இஸ்லாமிக் மீடியா' என்ற இணையத்தளம் வலைவீசியுள்ளது.

இந்த இணையத்தளத்தில் அல் - கெய்டா அமைப்புக்கு ஆள்கள் தேவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் வீடியோ தயாரிப்பு, படத்தொகுப்புச் செய்தல் உட்பட்ட பணிகளுக்கும் ஆள்கள் தேவை எனக் கோரப்பட்டுள்ளது.

எனினும், சேரவிரும்புபவர்கள் எவ்வாறு தொடர்பு கொள்வது என்பது பற்றிய தகவல்களோ சம்பள விவரங்களோ அதில் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டம் பாதுகாப்புக்கு மத்தியில் ஆரம்பம்

பீஜிங்,ஒக்.10

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுக்கூட்டம் பலத்த பாதுகாப்புடன் ஆரம்பித்துள்ளது.

சீனாவின் அடுத்த ஐந்து ஆண்டுக்கான தமது கொள்கையை வரையறுக்கும் வகையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பல நூற்றுக்கணக்கான மூத்த உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

இந்தக் கூட்டத்துக்கு வெளியாரின் பிரசன்னம் அனுமதிக்கப்படுவதில்லை.

நாளைவரை தொடரவுள்ள இந்தக் கூட்டத்தில் பொருளாதாரப் பிளவைக் குறைப்பதற்கான கொள்கைகள் மற்றும் அதிகரித்துள்ள ஊழல், அரசு மீதான வளர்ந்துவரும் அதிருப்தி என்பன உட்பட பல விடயங்கள் ஆராயப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## பள்ளிவாசலுக்குள் புகுந்த தீவிரவாதிகள் தாக்குதல்!

பாகிஸ்தானில் பள்ளிவாசலுக்குள் புகுந்த தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர்; மேலும் 12 பேர் காயமடைந்தனர் என பாகிஸ்தான் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. பஞ்சாப் மாகாணம் மண்டி பஹதீன் பகுதியில் உள்ள பள்ளிவாசலில் கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. இஸ்லாமபாத்திலிருந்து 100 கி.மீற்றர் தொலைவில் இந்த இடம் உள்ளது.

# கடத்தித் தாக்கப்பட்ட சுவாமிகளை படையினர் அழைத்துச் சென்றனர்

யாழ்ப்பாணம்,ஒக்.10

இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தவரான ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடத்தின் பீடாதிபதி ராஜ்குமார் சுவாமிகளை படையினர் அழைத்துச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மீசாலையில் உள்ள ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடத்தில் வைத்து இனந்தெரியாதவர்களால் ராஜ்குமார் சுவாமிகள் கடத்தப்பட்டார். பின்னர் அவர் மோசமாகத் தாக்கப்பட்ட நிலையில் இணுவில் பகுதியில் உள்ள ஒழுங்கை ஒன்றிலிருந்து கோப்பாய்ப் பொலீஸாரால் மீட்கப்பட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சைபெற்று வந்தார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு மருத்துவமனையிலிருந்து படையினர் அவரை அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ-9-7)

# பல்கலையில் நினைவுப் பேருரைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.10

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்றும் நாளையும் நினைவுப் பேருரைகள் இடம்பெறவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரின் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சேர்.பொன்.இராமநாதன் நினைவுப் பேருரையில் யாழ்.பல்கலைக்கழகப் பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் வி.நித்தியானந்தன் ''யாழ்.மாவட்டத்தின் சமூக பொருளாதார முறைமை 1984 தொடக்கம் 2004 வரை'' என்ற பொருளில் பேருரை ஆற்றுவார்.

நாளை பிற்பகல் 3 மணிக்கு சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் சமஸ்கிருதப் பேராசிரியர் கலாநிதி வி.சிவசாமி ''பரதநாட்டியத் தத்துவம், பாரம்பரியம், மாற்றம்'' எனும் பொருளில் பேருரை ஆற்றுவார்.

இந்நிகழ்வுகளில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுள்ளனர். யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவையொட்டி வருடாந்தம் இந்தப் பேருரைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-12)

# தென்மராட்சியில் மாணவர்பேரவை நிகழ்வுகள்

முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப்.மாலதி நினைவு நாள் மற்றும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் ஆகியவற்றை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தென்மராட்சிக் கிளையினரால் தென்மராட்சியில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. அத்தோடு, அதேபகுதியில் உள்ள முன்பள்ளிகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களில் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் சிலருக்கு சைக்கிள்களும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. இதற்கான நிகழ்வுகள் இன்று முற்பகல் 11 மணியளவில் சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியில் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (ஓ)

# கடத்தப்பட்ட கப்பல் கப்டன் விடுதலை

கரவெட்டி,ஒக்.10

சோமாலியா நாட்டுக் கடற்பரப்பில் வைத்து ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட சரக்குக் கப்பலின் கப்டனும், வடமராட்சியைச் சேர்ந்தவருமான எஸ்.மகாலிங்கம் சோமாலியாவின் எல்-மான் துறைமுகத்தில் விடுவிக்கப்பட்டார்.

சோமாலியாவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக உலக உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மனிதாபிமான உதவிப்பொருள்களை எடுத்துச்சென்ற எம்.வி.செம்யோவ் என்ற இந்தக் கப்பல் கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி ஆயுததாரிகளால் கடத்தப்பட்டது.

இக்கப்பலின் கப்டன் எஸ்.மகாலிங்கம் மற்றும் பணியாளர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. விடுவிக்கப்பட்ட கப்பலில் உள்ள சரக்குகள் தற்போது எல்-மான் துறைமுகத்தில் இறக்கப்படுகின்றன. இந்தப் பணி சுமார் மூன்று நாள்கள் இடம்பெறும் அதன் பின்னர் அக்கப்பல் சுமார் 4 நாள்கள் பயணித்து கென்ய நாட்டுத் துறைமுகமான மொம்பசாவை அடையும் அங்கிருந்து எஸ்.மகாலிங்கத்தை இலங்கைக்கு அழைத்துவரும் ஏற்பாடு குறித்து சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்துடன் கென்யாவுக்கான இலங்கைத் தூதர் பேச்சு நடத்துகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ-12-70)

## வலிகாமம் பிரதேச தொண்டர் ஆசிரியருக்கு நேர்முகப் பரீட்சை

வலி.தெற்கு,ஒக்.10

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோருக்கென நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தோற்றத்தவறியவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் நடைபெற உள்ளது.

இம்மாதம் 3 ஆம் திகதி நடைபெற்ற நேர் முகப் பரீட்சைக்குத்தோற்றத்தவறிய தொண்டர் ஆசிரியர்கள் அன்றையதினம் தவறாது நேர் முகப் பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.

(ஓ-152)

## ஆசிரியர் கௌரவிப்பு

நல்லூர்,ஒக்.10

சிறந்த ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்ட இந்தப் பரிசளிப்பு வைபவத்தில், யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறைப் பேராசிரியர் கலாநிதி சபாஜெயராசா, ஈ.எஸ்.பேரம்பலம், வர்த்தக நிறுவன அதிபர் எஸ்.நாகரத்தினம், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், கல்வி மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் ஆ.நடராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் செல்வி தி.பெரியதம்பி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த 600 ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டு கேடயம்,சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டன. (ஓ-11)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பேரினவாத சகதிச் சதிக்குள் சிக்குண்டுள்ள சுதந்திரக்கட்சி

**19** ஆண்டுகளுக்கு முன்பு - 1986ஆம் ஆண்டு முற்பகுதியில் நடந்த சம்பவம் இது.

*" என்றோ ஒருநாள் இலங்கை அரசியலில் நான் ஈடுபட்டே தீருவேன். நான் ஆட்சிக்கு வந்தால் தமிழ்மக்கள் மீது சுமத்தப்பட்ட ஒடுக்கு முறைகளை அகற்றி சமாதா னத்திற்கும் இன ஒற்றுமைக்கும் வழி சமைப்பேன்"* - இப்படி உறுதிமொழி கூறினார் இலங்கையின் இரண்டு முன்னாள் பிரதமர்களின் மகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

அதுவும் தமிழரின் ஏக - அதிகாரபூர்வ - விடுதலைப் போராட்ட சக்தியாக விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்திடம்தான் இந்த உணர்ச்சிவசமான பிரகடனத்தைச் செய்தார் குமாரதுங்க.

அப்போது சென்னை, அடையாறு, இந்திரா ஆகிய நகரில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின்அரசியல் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. சந்திரிகா குமாரதுங்கவுக்கும் மதியுரைஞர் பாலசிங்கத்துக்கும் இடையில் முதல் தடவையாகவும், ஒரேதடவையாகவும் இடம்பெற்ற சந்திப்பு இதுதான். தமது கணவர் விஜேகுமாரதுங்கவுடனும், அவரது ஸ்ரீலங்கா மக்கள் கட்சியைச் சேர்ந்த ஒஸி அபேகுணசேகரவுடனும் இந்தச் சந்திப்பில் சந்திரிகா கலந்துகொண்டார். புலிகள் தரப்பில் மதியுரைஞர் பாலாவுடன் இப்போது புலிகளின் காவல்துறைக்குப் பொறுப்பாக இருக்கும் பா.நடேசனும், லோறன்ஸ் திலகரும் இந்தச் சந்திப்பில் பங்கு கொண்டிருந்தனர்.

சுமார் ஒன்று, ஒன்றரை மணி நேரம் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் குறித்து இரு தரப்பினருக்கும் இடையில் நிகழ்ந்த வாதப் பிரதிவாதங்களின் பின்னர், சந்திப்பு முடிந்து புறப்பட முன்னதாக, இப்படி 'தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட ஒடுக்குமுறைகளை நீக்குவேன்' என்று உணர்ச்சியுடன் பிரகடனம் செய்தார் சந்திரிகா என்கிறார் மதியுரைஞர் பாலா.

அந்தச் சந்திப்பு நடந்து எட்டு ஆண்டுகளின் பின்னர் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக சந்திரிகா பதவியேற்றார். அந்தப் பதவியை பதினொரு ஆண்டுகள் தொடர்ச்சியாக - முழு மூச்சாக - ஆண்டனுபவித்த பின்னர், இன்னும் நாற்பது நாள்களில் அதிகாரத்தில் இருந்து அகல வேண்டியவராக இருக்கின்றார் அவர்.

பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னர், தனது கணவனுக்கு முன்னால் வைத்துத் தாம் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றாமல் - நிறைவேற்ற முடியாமல் - பதவிக் கதிரையிலிருந்து இறங்குகின்றார் சந்திரிகா.

தனது பெற்றோரின் வழியில் தொடர்ந்து தானும் மேற்கொண்ட - சிங்கள, பௌத்த மேலாண்மைவாதக் கருத்தியலில் புதைந்த - செயற்பாடுகளின் மூலம், இந்த இலங்கைத் தீவுக்கு அழிவைத் தேடித்தந்ததைத் தவிர ஆக்கபூர்வமாக எதுவும் செய்யாதவராகவே அதிகாரத்தைவிட்டு அவர் நீங்குகின்றார்.

அவர் ஆட்சிக்கு வந்த பின்னர், அமைதி வழியில் - சமாதான முறையில் - இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு இரண்டு தடவைகள் கிடைத்த அரிய வாய்ப்புகளைப் போட்டடித்துக் குழப்பி விட்டு இப்போது சந்தர்ப்பத்தைத் தவறவிட்டவராக வெறுங்கையோடு வெளியேறுகின்றார் அவர்.

சமாதான தேவதையாகத் தோற்றிப் பின்னர் போர் வெறியராகத் தம்மை மாற்றி, தொடர்ந்து தமது செயல்கள் மூலம் தமிழர் விரோதியாய்த் தம்மை நிரூபித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அதிகாரத்தை விட்டு வெளியேறும்போது தமது கட்சிக்காரர்களினாலேயே பொருட்படுத்தப்படாத அரசியல் அநாதையாக வெளியேற வேண்டிய இழி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்.

அவரது கருத்துக்கு - கொள்கைகளுக்கு - செவிமடுப்போர் அவரது கட்சியிலேயே இல்லை என்ற நிலைமை அவருக்கு . அடுத்த நாற்பது நாள்களுக்குள் பறிபோகும் அவரது அதிகாரத்தின் பின்னர், 'முன்னாள் ஜனாதிபதியாக' ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெறுங்கையோடு அவர் வெளியேறும்போது, அவரது கட்சிக்குள் கூட அவருக்கு மதிப்பு மிஞ்சுமா என்பது இன்றைய நிலையில் சந்தேகத்துக்குரியதே.

நிறைவேற்று அதிகாரத்தோடு நாடாளுமன்ற அரச அதிகாரத்தையும் தாமே வைத்திருக்க வேண்டும் என்ற பேராசை காரணமாக பௌத்த - சிங்கள மேலாண்மைவாதத் தீவிரப் போக்குடைய ஜே.வி.பியினரை அவர் அரவணைக்க முற்பட்ட போது, கட்சிக்குள் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ உட்படப் பலர் அந்தத் திட்டத்தை அப்போது எதிர்த்தனர். ஆனால், அதிகார ஆசை, பதவிக் கதிரைகள் மீதான பேராவல் என்பன அந்த நல்ல ஆலோசனைகளைக் கேட்க அவரை அனுமதிக்கவில்லை. ஆனால், இப்போது அவர் பட்டுத் தெளிந்துவிட்டார். பேரினவாதிகளின் உண்மை முகத்தை அம்பலப்படுத்த அவர் முயல்கின்றார்; முனைகின்றார்.

ஆனால், என்ன காரணத்துக்காக முன்னர் ஜனாதிபதி சந்திரிகா ஜே.வி.பியினரை அரவணைத்தாரோ, அதே காரணத்தைக் காட்டி இப்போது மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடனான உறவை இறுகப் பற்றிக்கொள்கின்றார். ஜனாதிபதி சந்திரிகா பதவிப் பேராசைக்காக ஜே.வி.பியைத் தம்முடன் சேர்த்துக் கொண்டமை போல இப்போது அதே பதவிப் பேராசைக்காக ஜாதிக ஹெல உறுமய, ஜேவிபி போன்றவற்றை - சந்திரிகாவின் எதிர்ப்புக்கு மத்தியிலும் - இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறார் ஆளும் ஐக்கிய பொதுமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ .

இது விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா இனி என்ன சொன்னாலும் அதைக் கேட்கும் நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இல்லை. கட்சி ஸ்தாபகர் அமரர் எஸ். டபிள்யூ ஆர்.டி பண்டாரநாயக்கவின் மனதில் ஊறி இருந்த தீவிர பௌத்த - சிங்கள மேலாண்மைவாதக் கருத்தியலுடன் கூடிய போக்குக்குள் மீண்டும் சிக்கிக் கொண்டுவிட்டது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. அந்த சகதிக்குள் - சதிக்குள் - இருந்து அக்கட்சி மீண்டு வருவது என்பது இப்போதைக்குச் சாத்தியமல்ல.

# மோட்டார்ச் சைக்கிளின் பின்னால் அமர்ந்து செல்வோர் 'ஹெல்மற்' அணியாமல் பயணித்தால் சட்ட நடவடிக்கை

## யாழ். மேலதிக நீதிவான் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.10

மோட்டார் சைக்கிள்களில் பின்னால் அமர்ந்து பயணஞ்செய்பவர்களும் கட்டாயம் தலைக்கவசம் (ஹெல்மற்) அணிந்து பயணஞ்செய்ய வேண்டும். இதன் மூலம் உயிர் இழப்புக்களைக் குறைத்துக்கொள்ளமுடியும்.

- இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்.

மோட்டார் சைக்கிள்களில் பின்னால் அமர்ந்து செல்லும் அநேகர் தலைக்கவசம் அணிவதைத் தவிர்த்துக் கொள்கின்றனர். இதனை எங்கும் பரவலாகக் காணக்கூடியதாகவுள்ளது. இதனால் வீண் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

நல்லூர், சட்டநாதர் கோயிலடியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணித்த ஒன்பது பிள்ளைகளின் தந்தை ஒருவர் தலையில் படுகாயமடைந்து மரணமடைந்துள்ளார். விபத்து இடம்பெற்ற சமயம் மோட்டார் சைக்கிளின் பின்னால்அமர்ந்திருந்து பயணித்தவர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை.

மோட்டார் சைக்கிள்களில் பின்னால் அமர்ந்து செல்வோர் தலைக்கவசம் அணியாது சென்றால் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பதற்கான சட்டம் ஏற்பாடு நடைமுறையில் உள்ளது. எனவே, இந்தச் சட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, மோட்டார் சைக்கிள் செலுத்துனர்கள் இது விடயத்தில் கூடிய கவனம் எடுத்துச் செயற்படவேண்டும் - என்று நீதிவான் மேலும் தெரிவித்தார். (எ-203)

# வீதி விதிகளை மீறும் வாகனங்களை நீண்டகாலம் தடுத்துவைக்க முடிவு

## போக்குவரத்து ஒழுங்கை கண்காணிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.10

குடாநாட்டில் வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்குடன் போக்குவரத்து விதிகளை இவ்வாரம் முதல் கடுமையாக நடைமுறைப்படுத்த நீதித்துறை முடிவு செய்துள்ளது.

சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பக்கம் பக்கமாகப் பயணிப்போருக்கு அபராதம் விதிக்கப்படும். அவ்வாறானவர்களின் வாகனத்தை நீண்ட காலத்துக்கு நீதி மன்றத்தில் தடுத்து வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியன இல்லாமல் செலுத்தும் வாகனங்கள் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தடுத்துவைக்கப் படவிருக்கின்றன.

'ஹெல்மற்' அணியாமல் செல்வோரும் கைதுசெய்யப்படவிருக்கின்றனர்.

போக்குவரத்து விதிகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்தும் நோக்கில், நீதிவான் நேரடியாக களத்துக்குச் சென்று கண்காணித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றார்.

நீதிவான் சகல பகுதிகளுக்கும் சென்று விதிகளை மீறுபவர்களைச் கைதுசெய்ய நடவடிக்கை எடுப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)




*யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு படையினர் இரத்ததானம் வழங்குவதையும் யாழ். நூலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)*

# தரைப்படையின் 56ஆவது நிறைவையொட்டி சிப்பாய்கள் நேற்று இரத்ததானம் வழங்கினர்

யாழ்ப்பாணம்,ஒக்.10

இலங்கை தரைப்படையின் 56ஆவது ஆண்டு நிறைவையொட்டி படையினர் நேற்று யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்திருந்தனர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு யாழ். நாகவிகாரைக்கு முன்பாக அமைந்துள்ள கட்டடத்தில் வைத்து படையினர் யாழ். ஆஸ்பத்திரிக்கு இரத்ததானம் செய்தனர்.

இரத்தம் சேகரிக்கும் பணியில் யாழ். ஆஸ்பத்திரியின் இரத்த வங்கிப்பிரிவினர் மற்றும் சிற்றூழியர்கள், தாதியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

சுமார் 150 இற்கும் அதிகமான படையினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து, படையினர் சார்பில் யாழ்.பொது நூலகத்திற்கு ஒருலட்சம் ரூபா நிதி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தலைமைவகித்தார்.

நூலகத்திற்கான ஒரு லட்சம் ரூபா காசோலையினை யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் பிரதம நூலகர் எஸ். தனபாலசிங்கத்திடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம், நூலக உத்தியோகத்தர்கள், படையினர் எனப்பலர் கலந்துகொண்டனர். (எ-7-15)

# சாட்டி கிணறுகளில் தண்ணீர் இல்லை குடிதண்ணீர் விநியோகத்தில் நெருக்கடி

ஊர்காவற்றுறை,ஒக்.10

தொடரும் வரட்சியினால் வேலணை- சாட்டிப் பகுதியில் அமைந்துள்ள குடிதண்ணீர்க் கிணறுகளில் நீரினை பெற்றுக்கொள்வதற்காக பவுஸர்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்கவேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாட்டிப் பகுதியில் உள்ள கிணறுகளிருந்தே வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்குத் தினமும் பவுஸர் மூலம் குடி தண்ணீர் விநியோகப்பதற்கான தண்ணீர் பெறப்படுகிறது.

இதனால், ஒரு பவுஸர் நீர் நிரப் பியதும் கிணறு வற்றிவிடுவதாகவும் மீண்டும் நீர் ஊற்று அதிகரிக்கும் வரை காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் பவுஸர் சாரதிகள் தெரிவித்தனர்.

இதனால், குடிதண்ணீரை நிரம்புவதில் பவுஸர் சாரதிகளுக்கிடையில் கடும் போட்டி நிலவுவதாகவும் - இதனால் பவுஸர் சாரதிகள் அதிகாலையிலே நீர் நிரப்புவதற்கு சென்றுவிடுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

எனவே, சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இவ்விடயத்தில் தலையிட்டு மேலும் சில கிணறுகளைச் சாட்டிப் பகுதியில் அமைப்பதன் ஊடாக பொது மக்கள் எதிர்நோக்கிவரும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டுப் பிரச்சினையை ஓரளவேனும் தீர்க்கக்கூடியதாக இருக்கும் எனக் கூறப்பட்டது. (எ-16)

## உதயவாக்கு

இலக்குகள் வாழ்வின் குறிக்கோளாகும். வாழ்வில் வெற்றிபெறக் குறிக்கோள் இருப்பது அவசியம்.

*- ஓர் அறிஞர்.*

## நாளை

*புரட்டாதி 25*
செவ்வாய்க்கிழமை
*11.10.2005*
திதி: அட்டமி
*முற்பகல் 09.20 வரை*
*நட்சத்திரம் : உத்தராடம்*
பின்னிரவு 02.51 வரை
சுபநேரம்: *10.32 - 12.02*
ராகுகாலம்: *03.02 - 04.32*
*(யாவும் பழைய நேரப்படி)*

# வவுனியாவில் உணர்வு பூர்வமாக நடந்த பெண்கள் எழுச்சி மாநாடு

வவுனியா,ஒக்.10

வவுனியா முத்தையா மண்டபத்தில் இரண்டாவது முறையாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாபெரும் தமிழீழப் பெண்கள் எழுச்சி மாநாடு நடைபெற்றது.

அன்றையதினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசியக் கொடியை மாவீரர் ஒருவரின் தாயாரான சரஸ்வதி ஏற்றி வைத்தார். இந்த நிகழ்வில் பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். அத்துடன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் -

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனும் இதில் கலந்துகொண்டனர். (எ-9-164-203)

**"விரயமாகும் பொருள்களை மீள் மூலதனமாக்குவோம்."**

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஓட்டோமரிக் பாத்மிஷின், டீ.பிறிஜ். ஐஸ் கிறீம் கடைக்குரிய பந்தல், சுற்று அடைப்புகள், கதிரைகள், மேசைகள், பிளாஸ்டிக் போட்டுகள், உழுந்து அரைக்கும் கிரைண்டர், 3 வேஸ், எயர் கெண்டிஷனர், டெக்னிக் செற் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.செல்வராணி, குலம் கிறீம் ஹவுஸ் அருகில், ஆலடிச் சந்தி, மானிப்பாய். (41140)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கருவேலடி வீதியில் யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சமீபமாக 1¾ பரப்பில் குழாய்க்கிணற்றுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: காஞ்சனா பிரேம்குமார், கருவேலடி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P.No.: 021-4590359 (40779)

யாழ்ப்பாணத்தில் ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில் 2½ பரப்புக் காணியில் எல்லா வசதிகளுடனும் உடன் குடியேறத்தக்க வீடு விற்பனைக்குண்டு. தரகர் இல்லை. தொடர்பு: T.P.: 0776220051 (41130)

## அமெரிக்க விசா

55050 அமெரிக்க விசா லொத்தர் Lateat விண்ணப்ப விவரங்களை இலவசமாகப் பெற சரியான விலாசத்துடன் தொடர்பு கொள்க. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய வாய்ப்பு. Penquin Book Shop, $B_2/F_{23}$ Bloemendhal flats, Colombo-13. T.P.:077 3081764, 2438367 Internet மூலம் அமெரிக்காவிற்கு அனுப்பி Receipt அனுப்பப்படும். (சி/45719)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975ஆம் ஆண்டு பிறந்த, 7இல் செவ்வாய் தோஷமுள்ள மணமகனுக்கு A/L படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2713, மே/பா உதயன்.(41169)

### முதியோர் இல்லத்தில் மருத்துவ பரிசோதனை

உலக லயன்ஸ் சேவைகள் தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நேற்றுமுன்தினம் கைதடி முதியோர் இல்லத்தில் மருத்துவப் பரிசோதனை முகாமினை நடத்தினர். காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை கண், இரத்த அழுத்தம், நீரிழிவு, தோல்நோய், பொது மருத்துவம், இரத்தம் ஆகிய பரிசோதனைகள் மேற் கொள்ளப் பட்டன. கழகத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் இப்பரிசோதனைகளை மேற்கொண்டனர். (எ-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





யாழ். பல்கலைக்கழகத்தில் 06-10-2005இல் பட்டம் பெற்ற யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களான

புலேந்திரலிங்கம் குகானந்தன்
B.Com. (M.Ma. Spl.)

சின்னையா ஜீவபாசினி
B.A.Economics (Hons)
(Second Upper)

மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

தம்பிப்பிள்ளை குடும்பத்தினர்.
தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி. (41183) (24-11-19)

சக்தி காட்வெயர்
சங்கத்தானை.

## HDFC வங்கியினது பங்கு விற்பனை ரூபா 220.00

Housing Development Finance Coperation Bank Of Srilanka தனது 2,500,000 சாதாரண பங்குகளைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்கிறது. ரூபா 100.00 பெறுமதியுடைய (Par Value) பங்கு ஒன்றின் விற்பனை விலை ரூபா 220.00 குறைந்த பட்சம் 100 பங்குகளுக்கு விண்ணப்பிக்கமுடியும்.

**Bankers to the issue - Bank of Ceylon**

உங்கள் விண்ணப்பங்களை 11-10-2005 இற்கு முன்னர் கீழ் உள்ள முகவரிகளுடன் தொடர்புகொண்டு சமர்ப்பிக்கவும்.

1. Bank of Ceylon
2. Bartleet Mallory Stockbrokers (Pvt) Ltd.
   Branch Office
   No.866, Point Pedro Road,
   JAFFNA.

   Agent Office
   Euroville Investments (Pvt) Ltd,
   No.866, Point Pedro Road,
   JAFFNA.

மேலதிக விவரங்களுக்கு: **021 222 7012**
Or Hotline V.நிறஞ்சன் - 0773043206, A.அரிகரன் - 0773130061

(சி/45519) (24-11-19)

## 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

ஆனந்த மலர்வு
1942 - 04 - 26



ஆறாத உதிர்வு
2005 - 08 - 27

### கனகசபை அருமைத்துரை (மகாலிங்கம்)

அன்புடனும் பாசத்துடனும் எம்மோடு வாழ்ந்த
உங்களது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

27-08-2005 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் பிரிவுச் செய்தி அறிந்து எமது இல்லம் விரைந்து எமது வேதனை உணர்வுகளைப் பகிர்ந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி, தந்திமூலம் துயரத்தைப் பகிர்ந்துகொண்டோருக்கும் பல வழிகளில் உதவி புரிந்த நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். 26-09-2005 அன்று நடைபெறவிருந்த வீட்டுக்கிருத்திய பிரார்த்தனை தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்று (10-10-2005) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும், இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

T.P.: 776152253
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு. (41184) (24-11-19)

மனைவி,
பிள்ளைகள்.

## சிரமதானம் மூலம் பொலித்தீன் ஒழிப்பு

நவாலி,ஒக.10

சூழல் பாதுகாப்பு தினத்தையொட்டி கல்லுண்டாய் வயல் வெளிகளிலும் அதனை அண்டியுள்ள வீதிகளிலும் பரவியிருந்த பொலித்தீன் கடந்த வெள்ளியன்று முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளன.

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் வை. சந்திரராசா தலைமையில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் சதானந்தன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்து இச்சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

சிரமதானத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்தினர் சிற்றுண்டி, குளிர்பானம் வழங்கினர். (எ-100)

## நீங்காத நினைவலைகள்

| 5ஆம் ஆண்டு | 9ஆம் ஆண்டு |
| --- | --- |
| அமரர் கந்தன் இராசு | திருமதி இராசு இராசம்மா |
| மண்ணில்: 20-06-1942 | மண்ணில்: 21-07-1947 |
| விண்ணில்: 05-10-2000 | விண்ணில்: 14-11-1996 |

-திதி: 10-10-2005

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
வாழ்ந்து எமக்கெல்லாம்
வழிகாட்டிய தெய்வங்களே!

நீங்கள் மறைந்து ஆண்டுகள்
பல சென்றாலும்
உங்கள் நினைவுகள்
- என்றென்றும்
எம் மனதைவிட்டு நீங்காது-

உங்கள் ஆத்மா சாந்தியடைய மன்றாடுகின்றோம்.

சேச் லேன்,
உடுப்பிட்டி. (41182) (24-11-19)

- பிள்ளைகள்.

## சிறுவர் கணனிப் பூங்கா

# COMPUTER EXPRESS

**Institute of Information Technology**
Jaffna
Tele: - 021-222 8250. 0777-222422

யாழ் நகரில் கணனித்தொழினுட்ப துறையில் தன்னிகரில்லா தனித்துவமான சேவையாற்றிவரும் எமது நிறுவனம் சிறுவர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் கணனிப்பூங்காவினை வெகு விமரிசையாக ஆரம்பித்துள்ளது. இங்கு சிறுவர்களிற்கான கணனிப்பயிற்சியும் வகுப்புக்களும் விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் குழாமினால் நடாத்தப்படும்.

### *KIDS Program*

1) Introduction to Computer
2) Fundamentals of Computer Technology
3) MS Paint
4) Introduction to MS Word
5) Introduction to MS Excel
6) Introduction to MS Power point
7) Internet & E-Mail
8) Intelligent Games

Course Fee 500/=

THEORY BASE ON
LEARN IT YOUR SELF
Book Part (I)
*(Duration: - 3 Months)*

### *Advance KIDS Program*

1) Introduction to Computer
2) Fundamentals of Computer Technology
3) MS Word
4) MS Excel
5) MS Power point
6) Internet & E-Mail
7) Introduction to Photoshop
8) Intelligent Games

Course Fee 750/=

THEORY BASE ON
LEARN IT YOUR SELF
Book Part (II)
*(Duration: - 4 Months)*

வகுப்புக்கள் ஆரம்பம:-

| | | |
| --- | --- | --- |
| (1) | Batch I | : - 12/10/2005 - 03.00-04.00 pm |
| (2) | Batch II | : - 15/10/2005 - 05.00-06.00 pm |
| (3) | Batch III | : - 19/10/2005 - 04.00-05.00 pm |

விஜயதசமியன்று மாணவர்களிற்கான பதிவுகளும் வகுப்புக்களும் நடைபெறும்.

# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் தனபாலசிங்கம்

(முன்னாள் சாரதி, இ.போ.ச. )



கந்தரோடை மேற்கு,
சுன்னாகம். (41185) (24-11-19)

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் தனபாலசிங்கம் 07-10-2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வீரசிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மகனும் இராசா - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் ரமணன் (சுவிஸ்), ரகுணன் (சுவிஸ்), ரமணி (ஜேர்மனி), ராகவன், ராதிகா (இத்தாலி), ரஜிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலா, தயாளவதனி, கணேசமூர்த்தி வரதராஜா ஆகியோரின் அன்பு மாமனும் அமரர் இராசமணி மற்றும் செல்லத்துரை, பாலசிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-10-2005) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கந்த ரோடை சங்கம்புலவு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# ஆரோக்கியம் மிகுந்த சமூக அமைப்பை சீர்குலையச் செய்யும் உளநலக் குறைகள்

**இன்று உலக உளநலநாள் அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

மனித வாழ்க்கையின் முழுமை என்பது உளநலம் சார்ந்த காரணிகள் சாதகமாக அமையப்பெற்று எவ்வித குறைபாடு இல்லாத வாழ்வியலைக் கட்டியெழுப்புவதைக் குறித்து நிற்கும். பொதுவாக ஒருவருடைய உளநலம் என்பது அகம் சார்ந்த பரம்பரை இயல்பினூடாகவும் சூழல் காரணிகள் அடிப்படையிலும் படிப்படியாக கட்டியெழுப்பப்படுகின்றது. ஆரோக்கியமான கற்றல் நிகழ்வதற்குரிய ஆரோக்கியமான சமூகக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கும் உளநலம் சார் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

உளநலம் பொருத்தப்பாடுடையதாக அமைகின்றபொழுது மேம்பாடு நோக்கிய விளைதிறனை எதிர்பார்க்கமுடியும். அந்த வகையில் இக்கட்டுரை எமது பிரதேசத்தை நாட்டின் ஏனைய பிரதேசத்துடனும் ஒப்பீடு செய்து உளநலம் சார் தன்மைகளை ஆராய்வதாக அமைகின்றது.

### உளநலமும் சமூகமும்

குறித்த ஒரு சமூகத்தின் விருத்திக்கு அங்கு வாழ்கின்ற உயிரினங்களின் நலன் பேணப்படுதல் அவசியம். உளநலமும் சமூகமும் இணைவு பெற்றன. உளநலம் பாதிப்படைகின்ற பொழுது சமூகமும் பின்னடைவுக்குத் தள்ளப்படும். ஆரோக்கியமான உளநல மேம்பாட்டு தன்மை ஆரோக்கியமான சமூக உருவாகத்துக்கு வழிசமைக்கும்.

ஆரோக்கியமான உளநலத்தை வளர்ப்பதில் கல்விச் செயற்பாடு மையத்தளமாக இயக்கம் பெறுகின்றது. உளநலத்தைப் பேணு தல் தொடர்பான கல்வித்திட்டம் சமூக நலத் தைப் பேணும் கல்வித்திட்டமாக அமைகிறது. சமூக நலத்தில் தனிமனித நலம், கூட்டு அமைப் பினரின் நலம், ஏனைய நலன்கள் என வகைப் படுத்தி நோக்கலாம்.

### உளநலமிக்கவரின் பண்புகள்

உளநலம் பேணப்பட்டு முழுமைபெற்று விளங்குபவரில் தமது நடத்தையை புறவயமாக மதிப்பிடும் ஆற்றல், விருப்பு, இலக்கு, ஊக்கம் தொடர்பான தெளிந்த விளக்கமும் அவற்றின் பலம், பலவீனத்தை அறியும் ஆற்றல், சுயகணிப்பீடு, சூழல் மீதான நம்பிக்கை உணர்வு, முன்னேற்றம் தொடர்பான பலம், தமது பொறுப்புக்களை ஏற்கும் இயல்பு, சுறுசுறுப்பு, முரண்பாடுகள் விளங்கும் திறன், சமூக விளக்கத்திறன், பகுத்தாராய்வு, பிரச்சினையை விடுவிக்கும் தன்மை, மனவெழுச்சி முதிர்ச்சி என்பன காணப்படுகின்றன முழுமையான ஆளுமைப் பண்புகளாகவும் அமைகிறது.

### உளநலமும் எமது பிரதேசமும்

இலங்கையைப் பொறுத்தமட்டில் உளநலம் தொடர்பான பாதிப்பு எல்லா இடத்திலும் பரந்து காணப்பட்டாலும் குறிப்பாக வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் ஒப்பீட்டு ரீதியில் உயர்வாகவே காணப்படுகின்றது. இதற்கு எமது பிரதேசம் எதிர்கொண்ட யுத்த சூழ்நிலையே காரணமாகின்றது. இதன்காரணமாக எமது சமூகத்தில் பாதிப்பு உடனடியாகவும், மறை முகமாகவும், நீண்டகாலத்தில் உணரக்கூடிய பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவும் அமை வதை அவதானிக்க முடிகிறது.

எமது பிரசேத்தில் உடல், உள ரீதியிலான இழப்பு மற்றும் பாதிப்புகளும் இடப்பெயர்வு, அழிவுகள், வன்முறை, சமூகச் சிதைவுகள், நோய்கள், வறுமை, போசாக்கு போன்ற காரணிகளால் ஏற்படுத்தப்பட்டு ஒருவரின் உளநலம் ஏதோ ஒரு வகையில் பாதிப்படையச் செய்கிறது.

பொதுவாகப் பாதிப்பு என்பது வீடு இழப்பு, சொத்து இழப்பு, உயிர் இழப்பு என்பவற்றை தாண்டி மிகவும் ஆழமாக ஊன்றி நிற்பது மனரீதியான பாதிப்புகளே. இது நீண்ட கால அடிப்படையில் உளநலத்தைப் பாதிக்கிறது. உளநலப் பாதிப்படைந்தவர் சமூக நியமம் சார் செயற்பாடுகளிலும் சமூக இசைவற்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுபவர். எமது சமூகத்தில் உளநலத்தைப் பாதிப்பது பற்றி யுத்த சூழல், பொருளாதாரம், பாடசாலை மாணவர், விசேட கல்வி தேவைப்படுவோர், கண்ணிகளினால் அவய இழப்பு ஏற்பட்ட தன்மை, போசாக்கு இன்மை என்ற அடிப்படையிலான உளநலக் குறைபாட்டு தன்மையை இனங்காண முடிகிறது.

## விரைந்து நடவடிக்கை எடுத்தல் சகலரினதும் பாரிய பொறுப்பு

### உளநலத்தைப் பாதிக்கும் காரணிகள்

ஒரு தனி மனிதனின் உளநல சமநிலை பாதிப்படைவதற்கு குடும்ப நிலை, பொருளாதார காரணிகள், அயற்சமூகம், பிரிவு, இழப்பு, போசாக்கு,நோய், இடப்பெயர்வு, வன்செயல், முரண்பாடுகள் தரமான கல்வித்திட்டம் இன்மை,பொழுதுபோக்கு இன்மை, இயற்கை அனர்த்தம்,தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், சிறைத்தண்டனை, சொத்திழப்பு அதிர்ச்சி, மதுபாவனை என்பன காரணங்களாக அமைகின்றன.

உளநலத்தை நிர்ணயிப்பதில் பரம்பரை, விருத்தி, குடும்பம், அடிப்படைத் தேவைகள்,ஆன்மீகம், சமூகம், கல்விச் சூழல் என்பன அடிப்படையாக அமைகிறது. கணிப்பு, நம்பிக்கை, விவேகம், சகபாடிக்குழு, தொடர்பு சாதனங்கள், உரிமை,விழுமியங்கள், சமய வழிபாடுகள் என்பனவும் உளநல மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

### உளநலக் குறைபாடுகளை இனங்காணல்

எமது சமூகத்தைப் பெறுத்தமட்டில் கடந்த இரு தசாப்தகாலப் பகுதியில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக வடக்கு - கிழக்குப் பிரதேசம் ஏனைய பிரதேசத்தை விட பாதிப்படைந்ததுடன்,பின்னடைவுக்கு உட்படவும் காரணமாகியது. எமது சமூகத்தின் பலம் வினைத்திறன் மற்றும் விளைதிறன் என்பன திட்டமிட்டு மழுங்கடிக்கப்படலாயின. இதற்கு இன ரீதியான பாகுபாடும் ஒரு காரணமாகியது. எமது சமூகத்தில் ஏற்பட்ட பௌதிக வள சிதைவு,சிறுவர்களின் மனதில் ஏற்பட்ட பாதிப்புகள், ஆளணி இழப்பு, கலை, கலாசாரப் பண்பாட்டு விழுமிய தொலைவு, அரசியல் பழிவாங்கல்கள் தனியாள் ரீதியாக உளநலப் பாதிப்புக்கு வித்திட்டது.

போரினால் ஏற்பட்ட பல்வேறுபட்ட பாதிப்புகளினால் எமது சமூகத்தில் உயிர் இழப்பு, இடப்பெயர்வு மற்றும் வறுமைக் கோட்டு அடிப்படையிலான வாழ்க்கை முறை அதிகரிக்கலாயிற்று. உறவுகளை இழந்தும் பெற்றோரை இழந்தும் இளைய தலைமுறை பாதிப்படைந்தது. இதனால்,அவர்களின் இளமனம் பாதிப்படைந்ததுடன் கல்விச் செயற்பாடும் பாதிப்படையக் காரணமாகியது.

மேற்படி தரவின் ஊடாக யுத்தம், பரம்பரை, வறுமை காரணமாகப் பாதிப்படைந்த பாடசாலை மாணவர் பற்றிய நிலையை அறிய முடிகின்றது.

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் பரம்பரை மற்றும் சூழல் காரணிகளினால் உடல் நலம் பாதிப்படைந்து மனரீதியில் உளநலம் பாதிக்கப்பட்ட முன்பள்ளிக் கல்வியில் ஈடுபடும் மாணர் விவரத்தை அட்டவணை I காட்டுகிறது.

| கல்வி நிர்வாக மாவட்டம் | கண் குறைபாடு உள்ள பிள்ளைகள் | | செவிப்புலன் குறைபாடு உள்ள பிள்ளைகள் | | மனவளர்ச்சி குறைபாடு உள்ள பிள்ளைகள் | | உடல் ஊனமுற்ற பிள்ளைகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| யாழ்ப்பாணம் | 17 | 15 | 11 | 08 | 14 | 10 | 11 | 09 |
| கிளிநொச்சி | - | - | - | - | 01 | - | - | - |
| முல்லைத்தீவு | 06 | 08 | 04 | 06 | 10 | 15 | 15 | 05 |
| மன்னார் | 08 | 12 | 26 | 44 | 21 | 11 | 04 | 04 |
| வவுனியா | - | - | - | 01 | 04 | 02 | 01 | - |
| திருகோணமலை | 06 | 06 | 05 | 04 | 04 | 06 | 04 | 02 |
| மட்டக்களப்பு | - | - | 03 | 04 | 02 | 01 | - | - |
| கல்முனை | 21 | 17 | 23 | 21 | 11 | 14 | 18 | 16 |
| அம்பாறை | 15 | 11 | 04 | 06 | 06 | 06 | 01 | 02 |
| மொத்தம் | 75 | 69 | 76 | 94 | 73 | 65 | 54 | 38 |

அட்டவணை I

(மூலம்: வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு -2003)

உளநலக் குறைப்பாடு ஏற்படுவதற்கு எமது பிரதேசத்தில் நிலவும் வறுமைத் தன்மையும், ஊட்டச்சத்து உள்ள உணவு பெறுவதில் உள்ள இடர்பாடும், அறிவீனமும் காரணமாக அமைகின்றது எனலாம். வறுமை காரண மாக மக்கள் தவறான முறையில் நடத்தையில் ஈடுபட நிர்பந்திக்கப்படுகின்றனர். இதன் காரணமாக எயிட்ஸ் போன்ற நோய் ஏற்படவும் வழி ஏற்படுத்துகின்றது.

இதனால், எமது பிரதேசம் கணிசமான அளவு பாதிப்படைந்து வருவதைத் தரவுகள் சுட்டி நிற்கின்றன. இதனால், சமூக உளநலப்பாதிப்பு ஏற்பட்டு எமது சமூகமே ஆபத்தின் விழிம்புக்குச் செல்ல தலைப்படுகிறது எனலாம்.

### உளநல மேம்பாட்டு நடைமுறைகள்

உளநல பாதிப்புக்கு உட்பட்ட சமூகத்தைச் சீர்மியப்படுத்துவதற்கு பல்வேறு செயற்றிட்டங்கள் அரச, அரசசார்பற்ற அமைப்புகளினால் முன்னெடுக்கப்படுவதைக் காணலாம். உளநலப் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பவரை மீளப் புத்துயிர்க்கவும், சமூக அங்கத்தவராக இயக்கம் பெறச் செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உளநலப் பாதிப்புகளினால் மற்றும் வேறு சூழல் காரணிகளினால் பாடசலையை விட்டு இடைவிலகியோருக்கான கல்வியை வழங்க திறந்த பாடசாலை அமைக்கப்படுகின்றன என்பதை அட்டவணை II காட்டுகின்றது.

அட்டவணை II

| வலயம் | எண்ணிக்கை |
|---|---|
| யாழ்ப்பாணம் | 19 |
| வடமராட்சி | 08 |
| வலிகாமம் | 16 |
| தீவகம் | - |
| தென்மராட்சி | - |

(மூலம்:Jaffna Plan)

விசேட கல்வித் திட்டத்தை நாடளாவிய ரீதியில் விரிவாக்குதல் குறிப்பாக தேசிய கல்விக் கல்லூரிகளில் விசேட கல்விக்கான பயிற்சி முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உளநலத்தன்மையில் பாதிப்படைந்தவரை வழிப்படுத்தும் வரையில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையைப் பாடசாலையின் கல்வித்திட்ட நடைமுறையில் முக்கியப்படுத்தப்படுதல் -

அரசசார்பற்ற நிறுவனம் வழங்கும் சீர்மியம் தொடர்பானதும், உளவள துணைக்கான பயிற்சி முறைமை -

அதிகரித்துவரும் நலன் பேணும் நிலையங்கள், அதற்குப் புலப்பெயர்ந்த மக்களும், சமயநிறுவனங்களும் உதவிவருகின்றமை.

அகவொளி, சாந்திகம், உளநலச் சங்கம், பல்கலைக்கழக உளநோயின் பிரிவு, சுகவாழ்வு நிலையம், உளநல மேம்பாட்டுச் செயற்பாட்டுக்கான குடும்பவளத்துணை நிலையம் என்பன குடும்ப அங்கத்தவர், முகாமையாளர், ஆசிரியர் மற்றும் சமூக அங்கத்தவர்களுக்கு உளநலமேம்பாடு சார்ந்த செயற்பாடுகளை நடந்தல்.

**ராஜவரன்**

சிறுவர்களின் உளநல மேம்பாட்டில் யுனிசெவ், சிறுவர்பாதுகாப்பு (SC) மனித உரிமை ஆணைக்குழு (HRC), குடும்பமேம்பாட்டுத் திட்டம் (FRC), கியூடெக், முன்பள்ளி பால் நிலைய அபிவிருத்திக்கான நிலையம் (RNS), ஆர்க் (ARK), அரங்க செயற்பாட்டு நிலையம் (TAG), திருமறைக் கலாமன்றம், அகவொளி, சுகவாழ்வு நிலையம், வாழ்வகம், சமூக மேம்பாட்டு மையம் (JASAC), சாந்தி அகம், நம்பிக்கை இல்லம், சிறுவர் பாதுகாப்புக் குழு, உளமருத்துவப் பிரிவு என்பன பல்வேறு செயல் நிலைகளை சமூக நோக்கு டன் செயற்படுத்தி வருகின்றமை.

மிதிவெடி தொடர்பாக ஏற்படும் உள, உடல் பாதிப்புக்களில் இருந்து விடுபட யுனிசெவ் அபாயக்கல்வி திட்டத்தைத் தேசிய கல்வி நிறுவனத்துடன் (NIE) இணைந்து செயற்படுவதும், வெண்புறா, ஜெயப்பூர் என்பனவும் அதிகளவில் பணிபுரிந்துவரு தல்.

புதிய கல்விச் சீர்திருத்தம் செயற்பாட்டுப் பூங்கா, செயற்பாட்டு அறை, விளையாட்டு மூலம் கற்றல் என்பன பிள்ளை சார்பான உளநலப் பேணல் திட்டமே.


✱ கடந்த 50 வருடங்காலத்தில் முதல் முதலாக உளநலசுகாதாரச் சட்டமூலம் முன்மொழியப்பட்டு இருப்பது உளநலப் பாதிப்பு அடைவோருக்குப் பல்வேறு நன் மையை ஏற்படுத்தும்.

✱ முரண்பாடுகளை நீக்கிய சமாதான முன்னெடுப்புகள் போன்ற பல்வேறு செயற்பாடுகள் எமது சமூகத்தினது உளநல மேம்பாட்டுச் சிந்தனையை நோக்கிய செயற் பரிமாணங்களாக அமைவதைக் காணமுடிகின்றது.

---

**கொக்குவில் இந்துக் கல்லூரியில் பழைய மாணவர்களின் அனுசரணையுடன் மாணிக்கம் சுப்பிரமணியம் வழங்கிய நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட ராஜபரமேஸ்வரி தகவல் தொழில்நுட்ப நிலையத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.**

**நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாணிக்கம் சுப்பிரமணியம் உரைநிகழ்த்துவதையும் அருகில் திருமதி சுப்பிரமணியம், கல்லூரியின்பழைய மாணவர் சங்கத்தலைவர் ஆர்.நடராஜா அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (எ-204)**



## மீனவருக்குக் கட்டுமரம்

யாழ்ப்பாணம்,ஒக.10

வடமராட்சி கிழக்கில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் கட்டுமரங்களை வழங்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக 79 கட்டுமரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் -

ஏனைய கட்டுமரங்கள் படிப்படியாக வழங்கப்படும் -

ஒவ்வொரு பயனாளிகளுக்கு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டுமரம் உட்பட மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படும் என்றும் - அந்த நிறுவனத்தின் இணைப்பாளர் தெரிவித்தார்.

(எ-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

07.10.2005 வெள்ளிக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 24 ஆவது
பட்டமளிப்பு விழாவில் சித்தமருத்துவமும் சத்திரசிகிச்சை
மாணிப் பட்டமும் பெற்ற சாவகச்சேரியை சேர்ந்த "டாக்டர்"

**திருமதி ஆனந்தஜோதி விஜயகுமார்**

அவர்களையும்
விஞ்ஞானமாணிப்பட்டம் பெற்ற கல்வயலைச் சேர்ந்த

**செல்வன் சின்னத்தம்பி ஆனந்தகுமார்**

அவர்களையும் அகம் மிக மகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.

"பூபதி" கல்வயல், சாவகச்சேரி.
**வே.குமாரசாமி குடும்பம்.**
(41144) (39-18-19)



## இரசாயனவியல்

GROUP CLASS &
PERSONAL CLASS
By: E.RANJAN (B.Sc)
0773- 203353
(41044)(39)



## யாழ்ப்பாணத்தில்



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்
வாழும் கலைப் பயிற்சி
**இலவச அறிமுக உரை**

நாள்:- நாளை (10.10.2005) திங்கட்கிழமை மாலை 6.00 மணி
இடம்:-கம்பன் கோட்டம், நல்லூர், யாழ்ப்பாணம்.
பயிற்சி நாள்கள்:- 11.10.2005 முதல் 16.10.2005 வரை
பயிற்சி நேரம்:- மாலை 6.00 மணி முதல் 8.00மணி வரை
மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0779059544

அன்பில் மலருங்கள் அனைவரும் வருக! உங்களை உணருங்கள்

www.artofliving.org (41198) www.srisriravishankar.org


### நேரடி பிரசாரங்களில் பிரதமர் பங்குபற்றுவதற்குப் பின்னடிப்பு!

கொழும்பு,ஒக்.10

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரும்,பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் காலத்தில் தொலைக்காட்சி நேரடி விவாதங்களில் கலந்துகொள்ளமாட்டாரென தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும், ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் நேரடி விவாதமொன்றில் கலந்துகொள்ள வைக்கத் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் சில முயற்சிகளை எடுத்திருந்தன. அதற்கான அனுமதியை இரு பிரதான வேட்பாளர்களிடமும் அவை கோரியிருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டபோதும், பிரதமர் மஹிந்த அதனை ஏற்றுக்கொள்ளவில்லையென்று தெரிகிறது. தேவையற்ற ரீதியில் எழும் பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்வதற்காகவே தொலைக்காட்சி நேரடி விவாதங்களை பிரதமர் தவிர்த்துக் கொண்டார் எனக் கூறப்படுகிறது. (ஐ)


## வாழ்த்துகின்றேன்



சித்த மருத்துவத்தின் சிறப்புறு
செயற்திறனை வெளிக்கொணர்ந்து
முதுதத்துவமாணி (M.phil)
பட்டத்தினைப் பெற்ற வைத்தியர்

**கணேஷ் ஸ்ரீதரன்**

அவர்களை வளமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

வைத்தியர் க.நவரத்தினம்,
நடன முருகன் வைத்தியநிலையம்,
யாழ்ப்பாணம்.
(41131) (39-18-19)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
**மகாலிங்கம் பிரசாந்தன்**
B.F.A. நுண்கலைமாணி
06.10.2005 இல் யாழ்.பல்கலைக்
கழகத்தில் நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில் B.F.A. நுண்
கலைமாணிப் பட்டம் பெற்ற
செல்வன் பிரசாந்தன் அவர்களை
மனமார வாழ்த்துகின்றோம்.

கொற்றாவத்தை.
நண்பர்கள்:
பிரகாஷ், குமரன், அசோக், வாணன்.
(41158) (39-18-19)


## கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குக் காணி

தென்மராட்சி,ஒக்.10

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு 3 பரப்புக் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதியைச் சேர்ந்த திருமதி தம்பிராசா நாகம்மா என்பவர் இக் காணிகளின் உறுதிகளை கிராம அலுவலர் பொ.லோகேந்திரன் முன்னிலையில் அவற்றின் நிர்வாகத்தினரிடம் வழங்கினார்.

கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு இரண்டு பரப்புக் காணியும் சனசமூக நிலையத்திற்கு ஒரு பரப்புக் காணியும் வழங்கப்பட்டதாக கூறப்பட்டது. (எ-111)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06.10.2005 வியாழக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற பட்டமளிப்பு
விழாவில் B.A.(Hons) பட்டம் பெற்ற

**திரு.பூ.செந்திற்குமரன்**

அவர்களை மனதார
வாழ்த்துவதில் மகிழ்ச்சி
அடைவதோடு மேலும் பல
சிறப்புக்களும் பட்டங்களும் பெற
வாழ்த்துகின்றோம்.

மகாநதி புடைவையகம்,
யாழ்ப்பாண மின்னகம்,
மகேஸ்சன்ஸ்.
உரிமையாளர்களும்,
ஊழியர்களும்.
(சி-45516) (39-18-19)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உலக ஆசிரியர் தினத்தையொட்டி எமது பாடசாலையின்
சிரேஷ்ட ஆசிரியை

**திருமதி தயாபரி சூரியகுமாரன்**

அவர்கள் வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால்
சிறந்த ஆசிரியையாக கௌரவிக்கப்பட்டுள்ளமையையிட்டும்,
எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர்

**திரு.மதியாபரணம் இரகுநாதன்**

அவர்கள் கல்வி முதுமாணிப்பட்டம் பெற்றதையிட்டும்
நாம் பெருமையுறுவதுடன் அவர்கள் மேலும் பல
உயர்வுகள் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.
(41161) (39-18-19)


### கணனிகள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஒக்.10

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கணனிகளை அன்பளிப்புச் செய் துள்ளார்.

இவ்வருடத்திற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து கணனிகள் கொள்வளவு செய்யப் பட்டு வழங் கப்பட் டுள்ளன.

இந்தக் கணனிகள் தென்மராட்சி பிரதேச சமுர்த்தி வங்கி மகா சங்கத்திற்கும், சாவகச்சேரி, வரணி ஆகிய வலய சமுர்த்தி வங்கிகளுக்கும் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது (எ-117)

### ஊக்குவிப்பு கொடுப்பனவு

காரைநகர், வாரிவளவு கற்பகவிநாயகர் ஆலயத் தினால் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படும் காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு பண உதவி வழங்கப்படவுள்ளதாக ஆலய நிர்வாகி தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் இத் திட்டம் நடைமுறைப்படுத்தபடவுள்ளது என்றும்-

காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்ட வறிய மாணவர்கள் நாட்டின் எப்பாகத்தில் இருந்தும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டாலும் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் -

தகுதியானவர்கள் ஆலய நிர்வாகத்துடன் நேரடியாக தொடர்பு கொள்ள முடியும் என்றும் - ஆலய நிர்வாகி மேலும் தெரிவித் தார். (எ-73)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அல்வாய் தெற்கு கொல்லரியன்
சீமா கண்ணகை அம்மன்
கோயிலடியைச் சேர்ந்த
செல்வி

**சூரிகா ஆனந்தராஜா**

அவர்கள் 07.10.2005 வெள்ளி
நடைபெற்ற பட்டமளிப்பு
விழாவில் மருத்துவமாணி
சத்திரசிகிச்சைமாணி (M.B.B.S) பட்டம் பெற்றதை
மனதார வாழ்த்துகின்றோம்.

பதுக்குளங்கரை,
அல்வாய்.
ந.சிவம் ஐயா
குடும்பம்.
(41132) (39-18-19)



# IMMEDIATE VACANCY

solidar
An INGO consortium including NPA, SAH and ASB

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Sri Lanka comprises of three international NGOs-Arbiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH)

We are currently at the planning stage for the phase 3 Tsunami Shelter construction project and the following vacancies are to be filled in immediately. All positions are based in Kilinochchi/Paranthan.

Interested candidates MUST posses the minimum requirements stated below. Please send in your applications to reach us on or before 11th October 2005. 156, Jaffna Road, Paranthan.

**Position: Head of Administration**

At least 2 years of experience in a similar role which should include the following: Staff management and office organization, management of relevant database systems, Good command of written and spoken English would be essential. Working knowledge on Word, Excel, PowerPoint and Access is a requirement .

**Position: Administrative Officer**

Provide administative support to the head of Administration Duties will include maint nance of filing system, preparation of travelpasses, arranging accommodation for guests. photocopying and other administrative tasks. Preference will be given to those with experience in a similar field.

**Position : Accountant**

Excellent knowledge in maintaining company accounts with at least 3-5 years experience. Must be able to work in MS Excel and Ms Access. Fluency in written and spoken English is a must.

**Position : Translators** (2 Positions)

Should be capable of both verbal and written translations from Tamil to English and vis versa. Ability to translate Sinhalese into English will be an added Qualification

**Position : Telephone Operator cum receptionist**

Experience in handling a PABX system would be an advantage though not essential. Good command of spoken English is a must.

Norwegian People's Aid | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் சண்முகம்
சசீபன்
B.A.(Hons)
(Special Digree in Economics)
யாழ்.பல்கலைக்கழகத்தின்
24 ஆவது பட்டமளிப்பு விழாவில்
பொருளியல்சிறப்புக் கலைமாணிப்
பட்டம் பெற்ற சசீபன் அவர்களை
மேலும் பல பட்டங்கள் பெற்று
பல்லாண்டுவாழவாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம்.
மாமா குடும்பத்தினர் மற்றும்
சு.மணிராஜா (மைத்துனர்)
(ஜாவா நிர்மாணிகர்)
(41167) (39-18-19)

## 16, 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டம்:

# கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி இருபிரிவுகளிலும் கோட்டச் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.10

கோப்பாய்க் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்றுவந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 16,18 ஆகிய இரண்டு வயதுப் பிரிவுகளிலும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி வெற்றி பெற்றுக் கோட்டச் சம்பிய னானது.

16வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயத்தை எதிர்த்து உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலய அணி 1:0 என்ற கோலால் வெற்றி கொண்டு மூன்றாவது இடத்தினைத் தனதாக்கிக் கொண்டது.

இச்சுற்றுப்போட்டியில் 18வயதுப் பிரிவு இறுதியாட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் அச்செழு சைவப்பிரகாசா வித்தியாலயமும் மோதின.

ஆரம்பம் முதல் மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் இடைவேளை வரை இரு அணிகளும் கோல் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்ததும் இந்நிலையில் 1:0 என்ற கோல் அடிப்படையில் கோப்பாய் கிறிஸ்தவக். கல்லூரி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் ஊரெழு கணேச வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர் புத்தகலட்டி விஸ்ணு வித்தியாலய அணி மோதவிருந்தது.

புத்தூர் புத்தகலட்டி விஸ்ணு வித்தியாலய அணி போட்டிக்கு சமுகந்தராததால் ஊரெழு கணேச வித்தியாலய அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

(3-190)

விளையாட்டு

## யாழ். கோட்ட உதைபந்தாட்டம்; இன்று இறுதியாட்டம்

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 12 வயதுப் பிரிவுகளுக்கான இறுதியாட்டம் இன்று பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் சென்.ஜோசப் வித்தியாலயத்தை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி மோதுகின்றது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய அணியை எதிர்த்து நாவாந்துறை ஆர்.சி. வித்தியாலய அணி மோதுகின்றது.

(3-190)

## கூடைப்பந்தாட்டப் போட்டியில்...

யாழ்ப்பாணம்,ஒக.10

யாழ்.மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை காலை 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகின்றது.

நாளைய போட்டியில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

காலை 7 மணி - பெண்கள் - கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் உடுவில் மகளிர் கல்லூரி.

காலை 8 மணி - ஆண்கள் - யாழ். மத்திய கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

(3-190)

# வட்டக்கச்சியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வட்டக்கச்சி,ஒக்.10

தியாகி திலீபன் நினைவாக வட்டக்கச்சி பிரதேச அரசியல்துறையின் ஆதரவுடன் வட்டக்கச்சிப் பிரதேச எழுச்சிப் பேரவையும் தியாகி திலீபன் நினைவு நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவினரும் இணைந்து வட்டக்கச்சியில் நடத்திய மாபெரும் விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**மாணவர்களுக்கான போட்டிகள்:**

* சாக்கோட்டம் - 11வயதுப் பிரிவு ஆண்கள்- சி.பிரதீபன், இ.ஜெயக்குமார், ஏ.சயந்தன்.
* சமநிலை ஓட்டம் - 11வயதுப் பிரிவு பெண்கள்- செ.பிரமிலா, த.தர்சிகா, கி.துசிகா.
* முட்டி உடைத்தல் - 15 வயதுப் பிரிவு ஆண்கள்- பா.தினேசன், இ.டிசாந்தன், சி.விவேகதாஸ்.
* முட்டி உடைத்தல் - 15 வயதுப் பிரிவு பெண்கள் - ச.அர்ச்சனா, இ.கோகுலவதனி, சி.எழிலரசி.
* நீர் நிரப்புதல் - 21 வயதுப் பிரிவு - பெண்கள் - சி.சிறிமிதுலா, செ.தாரணி.

**தாச்சி**

11வயதுப் பிரிவு ஆண்கள்- இராமநாதபுரம் ம.வி., இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை.

11 வயதுப் பிரிவு பெண்கள் - இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை.

**கபடி**

15 வயதுப் பிரிவு ஆண்கள் - இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை, இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை.

15 வயதுப் பிரிவு பெண்கள் - இராமநாதபுரம் ம.வி., இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை.

**கரபந்து**

17வயதுப் பிரிவு ஆண்கள் - இராமநாதபுரம் மேற்கு அ.த.ப. பாடசாலை, வட்டக்கச்சி ம.வி.

19 வயதுப் பிரிவு ஆண்கள் - இராமநாதபுரம் ம.வி, வட்டக்கச்சி ம.வி.

**வலைபந்தாட்டம்**

17 வயதுப் பிரிவு பெண்கள் - இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, இராமநாதபுரம் ம.வி.

19 வயதுப் பிரிவு பெண்கள் - வட்டகச்சி ம.வி., இராமநாதபுரம் ம.வி.

**மரதன் ஓட்டம்**

ஆண்கள்- இ.ஜீவதரன், சி.தீபன், எஸ். அன்ரன் யூட்.

பெண்கள் - ச.நிஷா, சி.துஷிதா, சு.ராதிகா.

**கிடுகுபின்னுதல்** - சி.மதிவதனி, சி. தேன்மதி, இ.தங்ககேஸ்வரி.

**பெட்டி இழைத்தல்** - சி.சிவனேஸ்வரி, சி.தேன்மதி, தே.மகேஸ்வரி.

**உணவு உண்ணுதல்** - அ.ஜெயசீலன், ப[illegible]மேஸ், மு.மணிமாறன்.

**தாச்சி**

ஆண்கள் - ஜொனி விளையாட்டுக் கழகம், மணிவண்ணன் விளையாட்டுக் கழகம்.

பெண்கள் - இராமநாதபுரம் மத்தி வி.க., பெரியகுளம் ஜோய் வி.க.

(3-203-405)



காரைநகர் அம்பாள் முன்பள்ளி விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கமலாகரன் வெற்றிபெற்ற சிறுமி ஒருவருக்குப் பரிசிலினை வழங்குவதைப் படத்தில் காணலாம். தீவக ஆசிரிய ஆலோசகர் ஆ.பாலராமனும் படத்தில் உள்ளார்.

(த-190)

# ஆளுநர் கிண்ணத்துக்கான மேசைப்பந்தாட்டப் போட்டி

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் கிண்ணத்திற்கான மேசைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்று திருகோணமலையில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

9,11,13,15,17,19 ஆகிய வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த ஆண்,பெண் இருபாலாருக்கும் இந்தப் போட்டிகள் நடத்தப்படும்.

யாழ். மாவட்டத்தில் இருந்து இப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் போட்டியாளர்களை நாளைமறுதினம் புதன் கிழமைக்கு முன்னர் யாழ். மாவட்ட மேசைப் பந்தாட்டச் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3-190-203)

# உடுவில் கோட்ட உதைபந்தாட்டம்; இன்று முதல் 18ஆம் திகதி வரை

வலி.தெற்கு,ஒக்.10

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் இச்சுற்றுப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதிவரை நடைபெறும். இறுதிப்போட்டி அன்று இடம்பெறும்.

தினமும் காலை 8.30 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும் ஆட்டங்களில் 14,16,18 வயதுக்குட்பட்ட மூன்று பிரிவுகளைச் சேர்ந்த அணிகள் மோதுகின்றன.

14 வயதுப் பிரிவில் 4 பாடசாலைகளும் 16 வயதுப் பிரிவில் 9பாடசாலைகளும் 18 வயதுப் பிரிவில் 5 பாடசாலைகளும் பங்குபற்றுகின்றன.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**காலை 8.30 மணி**

**14வயதுக்குட்பட்ட பிரிவு**

* ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி எதிர் மயிலணி சைவ வித்தியாலயம்.

**16 வயதுக்குட்பட்ட பிரிவு**

* மயிலணி சைவ வித்தியாலயம் எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.
* ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

**பிற்பகல் 2.30 மணி**

**16 வயதுக்குப்பட்ட பிரிவு**

* தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை எதிர் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.
* ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் ஏழாலை மகா வித்தியாலயம்.

**18வயதுப் பிரிவு**

* ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

(3-152-86)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்திய சிறுவர் தி[illegible] நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்களில் சிலவற்றை மேலே காணலாம்.

(படங்கள்: பரந்தன் செய்தியா[illegible])

## இலங்கை மின்சார சபை
### மின்பாவனையாளர்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்

மின்பட்டியலில் உள்ளபடி மின் நிலுவைகளைச் செலுத்துவது சம்பந்தமாகவும் நிலுவைகளைச் செலுத்தாதவர்களின் மின்னிணைப்புகளைத் துண்டித்தல் சம்பந்தமாகவும் பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொள்ளுமாறு மின்பாவனையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. இலங்கை மின்சாரசபையால் மின்பாவனையாளர்களுக்கு மாதா மாதம் வழங்கப்படும் மின்பட்டியலில் சிவப்பு நிறத்தில் குறிப்பிட்டவாறு மின் பட்டியல் வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாள்களுக்குள் மின்பட்டியலில் காட்டப்பட்டுள்ள தொகை செலுத்தப்படவில்லையாயின் வேறு எந்தவோர் அறிவித்தலுமின்றி மின் விநியோகம் துண்டிக்கப்படும்.
2. மின்னிணைப்புத் துண்டிக்கப்படும் பட்சத்தில் மீள மின்னிணைப்பு வழங்குவதற்கு மின்பட்டியலில் காட்டப்பட்டுள்ள தொகையுடன் மேலதிகமாக ரூபா 920.00 இனை மீளிணைப்பு வழங்குவதற்கான கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

மின்பாவனையாளர்களுக்கு வசதியாக மின்பட்டிய்ல் பணம் செலுத்தப்பட்ட அன்றே அவர்களின் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு வசதியாக ***இலக்கம் 500, கே.கே.எஸ்.*** வீதியில் அமைந்துள்ள மின்சார சபை அலுவலகத்தில் காசோலை மூலம் மின்பட்டியல் பணத்தைச் செலுத்த இலங்கை மின்சார சபை ஒழுங்குசெய்துள்ளது. இவ்வசதியைப் பயன்படுத்தி நிலுவைகளுக்காக, மின்துண்டிப்பைத் தவிர்த்துக் கொள்ளமுடியும் என்பதை இலங்கை மின்சார சபை யாழ். பிரதேச மின்பாவனையாளருக்குத் தெரிவித்துக்கொள்கிறது.

இம்மாதம் முதல் மேலே குறிப்பிட்டவாறு மின்பட்டியல் நிலுவையுள்ளவர்களின் மின்னிணைப்பைத் துண்டிப்பது அமுலில் இருக்கும் என்பதைக் கவனத்திற்கொள்ளுமாறு மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**மின்பொறியியலாளர்,**
**யாழ்.பிரதேசம்.** (சி/45521) (24-11-13)


## நெடுந்தீவில் புத்தகக் கண்காட்சி

நெடுந்தீவு,ஒக்.10

நெடுந்தீவு பிரதேச சபையினர் ஒக்ரோபர் மாதத்தை வாசிப்பு மாதமாகப் பிரகடனஞ்செய்து பிரதேச சபையின் பொது நூலகத்தில் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடத்தி வருகின்றனர்.

கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கண்காட்சி எதிர்வரும் 31ஆம் திகதி வரை நடைபெறும். (எ-203)

## காரைநகர் முதியோர் இல்லம் 3ஆவது தடவையும் விருதுக்குத் தெரிவு

காரைநகர்,ஒக்.10

காரைநகர் மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் வடமாகாணத்தில் இவ்வாண்டும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதற்கான பரிசு கடந்த முதலாந்திகதி கொழும்பு ரவர் மண்டபத்தில் நடைபெற்ற சிரேஷ்ட பிரஜைகள் விழாவில் வழங்கப்பட்டது. (த் பகுதி: சுவதேசவைபவத்தில் வைத்து வழங்கப்பட்டது.)

முதியோர் பகல் பராமரிப்பு நிலையை ஸ்தாபகரும் இயக்குநருமான எஸ்.கே.சிவலிங்கம் இதற்கான வெற்றிக்கேடயத்தையும் சான்றிதழையும், பணப்பரிசான பத்தாயிரம் ரூபா பெறுமதியான காசோலையையும் பெற்றுக்கொண்டார்.

மேற்படி முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் 2003ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் 2004ஆம் ஆண்டு வடமாகாணத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-73)


## நன்றி நவில்கின்றேன்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் கடந்த 05-10-2005 புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுகவீன லீவுப் போராட்டத்தில் ஒத்துழைத்து, வெற்றியீட்டப் பாடுபட்ட அனைத்து ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவச் செல்வங்கள், அன்பர்கள் யாவருக்கும் எமது தோழமையுடன் கூடிய நன்றிகள்.

**மூ.சுகுமார்** B.A. Dip. in Edu.
செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
யாழ்.வலயம், யாழ்ப்பாணம்.
(41050) (26-11-13-24)



## விசேட தீபாவளி சலுகை

எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு! இதுவரை எம்மால் வழங்கப்பட்ட சலுகைகளை விட தமிழர் திருநாளாம் தீபாவளி திருநாளுக்கான 1/2 கிலோவிலிருந்து எத்தனை கிலோவானாலும் புதிய சலுகைகள்!

நாடளாவிய ரீதியில் பொதிகளின் கட்டணம்
◦உயர்வுற்றாலும் எமது சேவை
வாடிக்கையாளர்களுக்காக தொடரும்.

குறைந்த கட்டணம் — குறுகிய கால விநியோகம்
உங்கள் உறவுகளின் கைகளுக்கு உடனடியாக

லண்டனுக்கான 5kg பொதிகளுக்கு 1kg ரூபா 500/- மட்டுமே

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253
குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993





## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் 07.10.2005 அன்று நடைபெற்ற 24 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் வரணி மகாவித்தியாலய பொருளியல் ஆசிரியர்

**திரு. வீரகத்தி குமாரவேற்பிள்ளை**
*B. A. (Hons), P. G. Dip. in. Edu., M. Ed.*

அவர்கள் கல்விமுதுமாணிப் பட்டம் - M.Ed - பெற்றதையிட்டு அவரை வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்களையும், பதவி உயர்வுகளையும் பெற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

வரணி — நண்பர்கள்



## IBMS

விசேட பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I : 09.10.2005 } பகல் 10.00 மணி
பிரிவு II : 10.10.2005

அனைத்து Diploma கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவர்களுக்காக கீழ்வரும் பயிற்சி நெறிகள் விசேடமாக ஆரம்பமாகவுள்ளன.

- Dip. in Visual Basic Programming
- Dip. in C++ Programming
- Dip. in AutoCAD

Head Office : # 410, K.K.S. Road, Jaffna
T.P. No.: 021 222 8232



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 720 | ஜுக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 07-10-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5740555-5756539 |

வெற்றி இலக்கங்கள்: **08 26 49 51**

லக்கினம்: கும்பம்

ஜக்பொட் பரிசு ரூபா. 17,99,550/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 25,77,550/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,48,255 | 10/- | 34,82,550/- |
| 2.இலக்கங்கள் | 32,071 | 20/- | 6,41,420/- |
| 1.இல லக்கினம் | 31,679 | 30/- | 9,50,370/- |
| 2.இல லக்கினம் | 2,886 | 100/- | 2,88,600/- |
| 3.இலக்கங்கள் | 844 | 500/- | 4,22,000/- |
| 3.இல லக்கினம் | 84 | 5,000/- | 4,20,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 17,99,550/- | - |
| | | மொத்தம் | 67,04,940/- |
| முச்சக்கர வண்டி | 5 | *2,10,450/- | 10,52,250/- |
| மொத்த பரிசுத் தொகை | | | 77,57,190/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 77,57,190/-

| | |
|---|---|
| மாத்தளை | 5747998-1-97 |
| பொலன்னறுவை | 5752455-3-37 |
| கம்பஹா | 5750176-6-83 |
| கொழும்பு | 5747414-4-12 |
| கொழும்பு | 5755024-4-63 |

அபிவிருத்தி லொத்தர் சபை



## UNIVERSITY OF MADRAS
INSTITUTE OF DISTANCE EDUCATION
சென்னை பல்கலைக்கழகம்

தேசிய தரமதிப்பீட்டு குழுவால் ஐந்து நட்சத்திர தகுதியும், பல்கலைக்கழக நல்கை ஆணைக்குழுவால் உயர்திறன் மையம் என்ற தகுதியும் பெற்றது

2005 - 2006 கல்வி ஆண்டிற்கான அனுமதி சேர்க்கை அறிவிப்பு

**Post Graduate Degree**

சென்னை பல்கலைக்கழகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் (இலங்கை) 3 ஆண்டு இளமானி பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர்கள் தொலைதூரக் கல்வி நிலையம் மூலம் முதுமானி பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**POSTGRADUATE**
2 Year Degree Programme

- M.Com Master of Commerce
- M.Sc. Psychology
- M.Sc. Mathematic
- M.A. Economics
- M.A. Tamil
- M.A. English
- M.A. Christian Studies
- M.A. Human Rights & Studies Edu

தகவல் மற்றும் நேரடி அனுமதி சேர்க்கை மையம்
**ASIAN COMPUTER SYSTEMS**
2G, Stanley Road, Jaffna. Tel : 021 222 5677



## HP New Arrivals

**Laser Jet**
1020
Simple, Compact, Affordable

print up to 14ppm(A4)
1200 x 1200 dpi
2MB RAM / USB / Host-based printing

**All in one**
3015
Simple, Compact and all in one

Print(14ppm-A4)
Scan(24bit, 600x600 dpi),
Copy(14 A4)
Fax(3 sec/page)
32MB RAM
USB & parallel

**DeskJet**
3845
Simple, Compact, Affordable

Printers 3845
Hp Desk Jet
4800 dpi
18 PPM,
6 ink colour Available
USB

**1320/1320n/1320tn**
Ideal for business

21ppm(A4)
1200 x 1200 dpi
16MB RAM(upgradable to 144MB/USB
Automatic 2 side printing

**Scanners**
2400/ 4070
To professional to desk top publishers

- 1200 dpi optical resolution
- 1200 x 1200 dpi hardware resolution
- up to 999,999 dpi enhanced resolution(Depending on computer memory disk space and other system factors)
- 48- bit colour.
- USB interface (USB compatible with USB 2.0 )
- Win 2000, Win XP, Win XP or Mac OS 9.1,10,10.2

## HP Repairs

எம்மால் அனைத்து விதமான லேசர் மற்றும் இன்க் ஜெட் வகையான பிரிண்டர்களும் உத்தர வாதத்துடன் திருத்தி கொடுக்கப்படும்
5L, 6L, 4m, 5m,
1000, 1100, 1200
1300, 1010, 1020
மற்றும் புதிய வகைகள்

- Paper jam
- paper struck
- spool problem
- Print quality
- tracing paper issues



SERVICE HOTLINE 071 444 2 555

**HP Original Toner & Cartridges**



எம்மிடம் அனைத்து விதமான பிரிண்டர்களுக்குமான லேசர் டோனர்களும் கலர் மற்றும் கறுப்பு காட்றிஜ்களும் உண்டு

SALES HOTLINE 0712 294 204

**MICRO PC SYSTEMS**

| | |
|---|---|
| கொழும்பு - 06 | 15. 36th Lane, Colombo-06 Tel: 011-4516764 |
| கொழும்பு - 13 | 310, George R De Silva Mw, Kotahena, Tel: 011-4619673 |
| யாழ்ப்பாணம் | 175/3 Kasturiyar Rd, Jaffna. Tel: 021 2225893, 077 3126712 |
| நெல்லியடி | Main Street,(Next to Police Station) Nelliyadi. Tel: 077 3039536 |
| வவுனியா | 73C, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 4588339, 0777308417 |
| திருகோணமலை | 148, Main Street, Trinco. Tel: 026 222 1054, 078 8720639 |


## இராணுவத் தளபதி யாழ்.வருகை

இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சரத் பொன்சேகா யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டு பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்தார்.

பலாலியில் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் யாழ்.நகர், தீவகம், முகமாலை ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகளைப் பார்வையிட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். (ஐ-3)



சூழல் தூய்மை பேணும் தினத்தை முன்னிட்டு வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகச் சுற்றாடல் செயலக உத்தியோகத்தர்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. இந்த சிரமதானத்தை பிரதேச செயலரும் தமிழர் புனர் வாழ்வுக்கழக யாழ்.மாவட்ட பணிப்பாளரும் பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம் இது.

*(படம்: சங்கானைச் செய்தியாளர்)*

# உரிய நேரத்தில் மழை இன்மையால் தீவக விவசாயிகளுக்கும் ஏமாற்றம்

ஊர்காவற்றுறை, ஒக்.10

தீவுப்பகுதியில் இவ்வருடம் பெரும் போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் உரிய நேரத்தில் மழை பெய்யாத காரணத்தினால் விதைப்பினை மேற்கொள்ள முடியர்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக அனலைதீவு, புளியங்கூடல், வேலணை, காரைநகர் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் விளைநிலங்களைச் செப்பனிட்டு வருகின்றபோதும் நிச்சயமற்ற காலநிலை காரணமாக நெல்விதைப்பை மேற்கெள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

விதைநெல் மற்றும் விவசாய உள்ளீடுகளின் விலைகள் அதிகரித்தும் விதைப்புச் செலவீனம் அதிகரித்தும் காணப்படும் இந்நிலையில் நிச்சயமற்ற காலநிலை காரணமாக விதைப்பினை மேற்கொண்டு அதன் மூலம் உரிய பலன் கிடைக்குமா என அவர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

(எ-16)

# உயர் தொழில்நிறுவன மாணவர் ஒன்றியத்துக்குப் புதிய செயற்குழு

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர் ஒன்றிய செயற்குழு புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் மூலம் இந்தச் செயற்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

செயற்குழுவின் தலைவராக சி.சுகந்தனும் உபதலைவராக ச.உமாகரனும் செயலாளராக இ.பிறேமகுமாரும் உப செயலாளராக யோ.ரஜீவும் பொருளாளராக ந.ஜெனார்த்தனனும்-

நலன்புரிச் செயலாளராக தி.அருட்சுதனும் பத்திராதிபராக சி.கார்த்திகாவும் விளையாட்டுத்துறைச் செயலாளராக ப.மயூரனும் கணக்காய்வாளராக மு.கஜேந்திரராசாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-202)

# சூழல் பேணும் தினத்தை முன்னிட்டு சங்கானையில் நடந்த சிரமதானம்

சூழல் தூய்மை பேணும் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வலி. மேற்கு சங்கானைப் பகுதியில் தமது சிரமதானப் பணியை நேற்று முன்தினம் மேற்கொண்டது.

இந்த சிரமதானப் பணியில் வலி.மேற்கு பிரதேச செயலாளர் சீ.ஏ.மோகன்றாஸ், உதவிப் பிரதேச செயலர் திருமதி தே.பாபு உட்பட செயலக ஊழியர்கள், கிராமசேவை அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலகத்தின் சுற்றாடல் முதல் சங்கானைச் சந்தை வரையான பகுதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த ஊழியர்களாலும் பிரதேச செயலக ஊழியர்களாலும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்தும் தமது கழகத்தால் மேற்கொள்ளப்படவுள்ளன என தமிழர் புனர்வாழ்வு கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தெரிவித்தார்.

(எ-29)

# 25 வருடங்களின் பின்னர் புனரமைக்கப்படும் வீதி

சுமார் 25 வருடகால இடைவெளியின் பின்னர் இணுவில் கிழக்கில் உள்ள வீதி புனரமைக்கப்படுகின்றது.

வலி.தெற்கு பிரதேச சபையினர் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் ஆலயத்திற்கு முன்னர் செல்லும் சின்னத்தம்பி புலவர் வீதியே இவ்வாறு நீண்டகால இடைவெளியின் பின்னர் புனரமைக்கப்படுகின்றது.

இதன் காரணமாக வீதியைப் பிடித்து அடைத்தவர்களின் வேலிகள் நீக்கப்பட்டு உரிய முறையில் வீதியை அமைக்க பிரதேச சபை நடவடிக்கையெடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்களும் பொது அமைப்புக்களும் பிரதேச சபையிடம் எதிர்பார்க்கின்றார்கள்.

குறிப்பிட்ட வீதி நீண்டகாலமாகியும் புனரமைக்கப்படாமையைச் சாதகமாகக் கொண்ட சிலர் தமது வீட்டு எல்லைகளை வீதிக்கு விஸ்தரித்துவிட்டனர் என்றும்-

எனவே, பிரதேசசபையினர் வீதி புனரமைப்பின் போது இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் - பொதுமக்கள் கோரியுள்ளனர்.

(எ-86)

# குடிதண்ணீர் வழங்கலுக்கான கொடுப்பனவு இன்மையால் விநியோகம் தடைப்படும் நிலை

காரைநகர்,ஒக்.10

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் காரைநகரில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பவுஸர் மூலமான குடிதண்ணீர் விநியோகத்துக்கு இதுவரை கொடுப்பனவு வழங்கப்படவில்லையென்றும் - இதனால் குடிதண்ணீர் வழங்கலை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடும் வரட்சி ஏற்பட்டுள்ள காரைநகரில் பிட்டியெல்லை, ஊரி, தோப்புக்காடு, பாலாவோடை, மொற்றிபுலம், நிலங்காடு, கல்லத்தாழ்வு, சத்திரத்தை, பொன்னாவளை உள்ளிட்ட பல கிராமங்களுக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபை குடிதண்ணீர் விநியோகித்து வருகின்றது.

மேற்படி குடிதண்ணீர் விநியோகத்திற்கான நிதியினை சமூகசேவைத் திணைக்களம் ஒதுக்கீடு செய்துள்ளது . எனினும், கடந்த நான்கு மாதங்களாக காரைநகர் பிரதேச செயலகம் இந்த நிதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் -

இதனையடுத்தே குடிதண்ணீர் விநியோகத்தை இடை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும்- பிரதேசசபை வட்டாரங்கள் கூறின. (எ-73)

## எழுவைதீவு இறங்குதுறையில் பயணிகள் தங்குமிடம்

ஊர்காவற்றுறை,ஒக்.10


எழுவைதீவு இறங்கு துறையில் புதிய பயணிகள் தங்குமிடம் அமைக்கும் பணிகள் துரிதகெதியில் இடம்பெற்று வருகின்றன.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்பு திட்டத்தின் கீழ் (காப்) சுமார் நான்கு லட்சம் ரூபா செலவில் இந்த பயணிகள் தங்குமிடம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழ் இப்பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்கென சுமார் அறுபத்தி மூன்று லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்திப் பணிகள் யாவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

(எ-16)






இலங்கை வங்கியின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைநகர் கிளையில் தங்கநகை அடைவு சேவை அண்மையில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் இது.

இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை மேலே காணலாம்.

அருகில் காரைநகர் கிளை முகாமையாளர் தா.குகநேசன் , இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் ஏ.அருமைநாயகம் , காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயலாளர் ஜெ.தில்லையம்பலவாணர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

*(படம்:- காரைநகர் செய்தியாளர்)*

# உள்ளீடு உருவாக்கல் போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரியர்களின் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.10

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நடத்திய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் தர உள்ளீட்டு உருவாக்கற் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பரிசில் பெறும் ஆசிரியர்களின் விவரம் வருமாறு;

**முதன்மைநிலை I**

*அதி விசேடம்:* திருமதி சூ.துரைசிங்கம் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.), திருமதி இ.நவரத்தினராசா (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி.), திருமதி தி.டொனா அல்பிறட் (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

*விசேடம் :* திருமதி சி.ஞானசேகரம் (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), திருமதி இ.வேணுகாந்தன் (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), திருமதி மா.மகேந்திரன் (சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை) தி.சுகுமாரன் (இணுவில் இந்துக்கல்லூரி), வே.அன்பழகன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை).

*சாதாரணம்:* திருமதி மேரி பெனிக்னா பிலிப் (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), தி.சுகுமாரன் (இணுவில் இந்துக் கல்லூரி), திருமதி உ.திருச்சபேசன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), திருமதி த.சாரதா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), திருமதி இ.இராஜேஸ்வரன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), திருமதி கு.விஜிதா (தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தி.), இராஜசேகரம் (கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வி.), திருமதி ஜெ.சிவநடராஜா (கரணவாய் தாமோதர வித்தியாலயம்), தெ.புவனேந்திரன் (கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தி.), த.சுகந்தினி (நாரந்தனை றோ.க.வித்தியாலயம்),

**முதன்மைநிலை II**

*அதிவிசேடம்:* ஞா.அன்ரன் பிறேமதாஸ் (உரும்பிராய் சந்திரோதயா வித்தி.), திருமதி பா.பொல்கமல்ராஜ் (உரும்பிராய் சந்திரோதயா வித்தி.), திருமதி ந.த.தயாளஜெயன் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.)

*விசேடம்:* திருமதி அ.சந்திரசேகரம் (கரந்தன் இராமப்பிள்ளை வித்தி.), கு.திலகவதி (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), மைதிலி மார்க்கண்டு (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), திருமதி. ம.உதயகுமார் (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), திருமதி நட.தயாளஜெயன் (கந்தரோடை தமிழக் கலவன் வித்தி)

*சாதாரணம்:* மஞ்சுளா நாகராஜா (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), மயூரதி லோகேஸ்வரன் (பன்னாலை சேர்.கனகசபை அ.த.க.பா.), திருமதி.பு.மனோகரன் (உரும்பிராய் சந்திரோதய வித்தி.), திருமதி ரி.ரி.அன்ரன் கிறேசியன் (சுன்னாகம் றோ.க.த.பாடசாலை), திருமதி.வ.பாலச்சந்திரன் (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி.), செ.கபரியேல்பிள்ளை (உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை), இ.சுபாசினி (கட்டுடை சைவ.வித்தியாலயம்), திருமதி.ச.சிவலிங்கம் (உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை), மயூரதி லோகேஸ்வரன் (பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பா), திருமதி .த.சுப்பிரமணியம் (தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்),

**முதன்மைநிலை III**

*அதிவிசேடம்:* திருமதி இ.லோகேஸ்வரன் (கரந்தன் ராமுப்பிள்ளை வித்தியாலயம்), திருமதி ம.உதயராசா (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி.), ம.மீனலோசனி (உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை).

*விசேடம்:* யாழினி அருளானந்தம் (திருக்குடும்ப கன்னியர் மடம்), வே.அன்பழகன் (இந்து ஆரம்ப பாடசாலை), அன்ரனி புறூனோ (இந்து ஆரம்ப பாடசாலை), யசோதா பிரேம்குமார் (திருக்குடும்பக் கன்னியர்மடம்), த.யோகராஜா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.), அ.டோறா பான்சி (புதுமடம் றோ.க.த.க.பாடசாலை).

*சாதாரணம்:* திருமதி ந.கேதீஸ்வரன் (கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வி.), திருமதி வ.அருட்செல்வன் (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி.), திருமதி பா.போல் கமல்ராஜ்(உரும்பிராய் சந்திரோதயா வித்தி.), திருமதி தெ.கொலின் (பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க.த.க.வி.),க.சுபாலினி (நாரந்தனை றோ.க.ம.வித்தியாலயம்), திருமதி நி.நந்தினி( நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), திருமதி ந.கேதீஸ்வரன் (கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வி.), திருமதி பூ.வரதராசா (அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை), யாழினி அருளானந்தம் (திருக் குடும்ப கன்னியர்மடம்), அ.டோறா பான்சி (புதுமடம் றோ.க.த.க.பாடசாலை),

**கணனிப்பிரிவு**

*அதிவிசேடம்:* திரு ர.யசோதரன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாட.), திருமதி உ.சிவபுத்திரன் (யாழ்.மத்திய கல்லூரி), திருமதி சி.கணேசநாதன் (யாழ்.மத்திய கல்லூரி).

*விசேடம் :* த.பிரியலஷ்மி (யாழ்.மத்திய கல்லூரி), க.சுமதி (யாழ்.மத்திய கல்லூரி), யோ.மடோனா (யாழ்.மத்திய கல்லூரி) யோ.ஜெறுசியா (யாழ்.மத்திய கல்லூரி).

(எ-202)

## யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)

*111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்*

### பகிரங்க ஏல விற்பனை 19.10.2005

**கழற்றப்பட்ட லங்கா அசோக் லேலண்ட்**
**Lanka Ashok Leyland**
**பாரவூர்தி உடற்கோப்பு**

லங்கா அசோக் லேலண்ட் 48-1955 சமாச பாரவூர்தியின் பாவனையிலிருந்த, நல்ல நிலையிலுள்ள, கழற்றப்பட்ட உடற்கோப்பு 2005.10.19ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இல.95, கே.கே.எஸ். வீதியிலுள்ள யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாச வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் யாழ்.மா. கூ.கி. வங்கிகளின் சமாச வளவில் இதனைப் பார்வையிடலாம். ஏலத்தில் இதனைப் பெற்றுக்கொள்பவர் ஏலத்தொகையின் 25வீதத்தை உடன் செலுத்த வேண்டும் என்பதுடன் மீதித் தொகையை 3 நாள்களுக்குள் செலுத்தி உடற்கோப்பை அப்புறப் படுத்த வேண்டும்.

9.10.2005. (சி-45518)(26-18-45)

**தலைவர்,**
*யாழ் .மாவட்ட வி.நு.கூ.ச.சமாசம்.*



## கண்ணீர் அஞ்சலி

07-10-2005 அன்று இறைவனடி சேர்ந்த எமது பழைய மாணவர் சங்கச் செயலாளரும் முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளருமாகிய

### கந்தசாமி செந்தில்குமரன்

அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது பிரிவால் துயரடையும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!

பாடசாலைச் சமூகம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
ஆசிரியர், மாணவர்.
யா/கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயம்.

பழையமாணவர் சங்கம்.

(41162)(26-18-45)



உ
சிவமயம்

இளங்கலைஞர் மன்றம் நடத்தும் 2005 ஆண்டு

## வாணிவிழா

இடம்: **இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்**
காலம்: **10.10.2005**
நேரம்: **மாலை 5.30 மணிமுதல் 8.30 மணி வரை**

*இசை ரசிகர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**இரவு 7.30 - 8.30 வரை கொக்குவில் கலாபவனம் வழங்கும் நாட்டியார்ப்பணம்**

*வழங்குபவர்:* **மகேந்திரன் தவேந்திரன்**
நட்டுவாங்கம் : V .அனுருத்தன்
மிருதங்கம் : S.மகேந்திரன்
பாட்டு : S.சூரியகுமார்
வயலின் : A.ஜெயராமன்

**10.10.2005 திங்கட்கிழமை மூன்றாம் நாள்**

*மாலை 5.20 மங்கள விளக்கேற்றல்*
*மாலை 5.30 - 5.45 குழுப்பாடல்*
**மன்ற இசைவகுப்பு மாணவர்**

*மாலை 5.45 - 6.30 இசைக்கச்சேரி*
பாட்டு : S.கிருஷ்ணானந்தன்
வயலின் : ஜனனி நல்லைநாதன்
மிருதங்கம்: V.ரமணன்
கடம்: A.செல்வரத்தினம்
முகர்சிங்: S. விமல்சங்கர்

*6.30 - 7.15 கவியரங்கம்*

### "வெள்ளைக் கமலத்திலே..."

*தலைவர்:* **கவிஞர் சோ.பத்மநாதன்**
**பங்குபற்றும் கவிஞர்கள்**

1. தி.திருக்குமரன்
2. இ.சு.முரளிதரன்
3. நாக.சிவசிதம்பரம்
4. பா.மகாலிங்கம்

*இரவு 7.15 - 7.30 பிரதம விருந்தினர் உரை*
**உயர்திரு.சி.வி.கே.சிவஞானம் அவர்கள்**
*யாழ்.மாநகர சபை ஆணையாளர்*

**இரவு 7.30 -8.30**
**பொன்னாலை பரத கலாலயம் வழங்கும் நாட்டியாஞ்சலி**
நட்டுவாங்கம்: திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்
மிருதங்கம் : S. துரைராசா
பாட்டு: பங்கயற்செல்வி முகுந்தன்
வயலின் : A. ஜெயராமன்

விஜதசமி அன்று 12.10.2005 புதன்கிழமை மாலை 4 மணிக்கு நாள் வகுப்பு நடைபெறும்.

சட்டநாதர் வீதி,
நல்லூர். (சி/45527)(26-45-18) – **இளங்கலைஞர் மன்றம்.**


## தீவுப்பகுதி மீனவருக்கு மீண்டும் 'பாஸ்'

ஊர்காவற்றுறை,ஒக்.10

தீவுப்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களுக்கு 'பாஸ்' வழங்கும் நடைமுறையைக் கடற்படையினர் மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

மெலிஞ்சிமுனைப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் தமக்குரிய பாஸினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஊர்காவற்றுறை கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் அமைந்துள்ள கடற்படையினரின் முகாம் முன்பாகக் கடந்த வெள்ளிக்கிழமை காலைமுதல் மாலை வரை கூடியிருந்ததைக் காணமுடிந்தது. (எ-16)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஒக்.10

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு யுனிசெவ் நிறுவனம், அறவழிப் போராட்டக் குழு, ஓடக்கரை நலன் விரும்பிகள் இயக்கம் என்பன புத்தகப்பைகள் மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளன.

அத்துடன், பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர் ஒருவர் இவ் வித்தியாலயத்தில் முதலாம், இரண்டாம் தரங்களில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டுக்குக்கீழ்வாழும் 15 மாணவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் பருத்தித்துறைத் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் பணம் வைப்புச் செய்துள்ளாரென அதிபர் இ.நாகேந்திரராசா தெரிவித்தார். (எ-175)

## சூழல் பாதுகாப்புத் தினம் பருத்தித்துறையில் சிரமதானம்

தென்மராட்சி,ஒக்.10

சூழல் பாதுகாப்புத்தினத்தை முன்னிட்டு பருத்தித்துறைப் பிரதேச சபையினால் பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளைச் சுத்தமாக வைத்திருப்போம் என்ற தொனிப் பொருளில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச சபையின் செயலாளர் சிதம்பரப்பிள்ளை பகவதி தலைமையில் பிரதேச சபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், ஆழிப்பேரலை புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான பணியாளர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

இந்தச் சிரமதானத்தின்போது மந்திகையிலுள்ள அரசினர் ஆதாரவைத்தியசாலைச் சூழல் உள்ளிட்ட மந்திகைப்பகுதி, மந்திகை - வல்லிபுரம் வீதி, மந்திகை- பருத்தித்துறை வீதி, மந்திகை- நெல்லியடி வீதி என்பவற்றின் இரு மருங்கிலும் போக்குவரத்துக்கு இடையூறாகவிருந்த மரங்கள் அனைத்தும் வெட்டப்பட்டதுடன் குப்பை கூழங்கள் உள்ளிட்ட திண்மக் கழிவுகள் யாவும் அப்புறப் படுத்தப்பட்டன.

இது தவிர இப் பிரதேசத்தின் ஏனைய முக்கிய இடங்களிலும் விசேட துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (எ-173)

## ஓரிரு தினங்களில் எஸ்.பி. விடுதலை

கொழும்பு,ஒக்.10

நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஐ.தே.கட்சித் தலைவர்களில் ஒருவரான எஸ்.பி.திஸாநாயக்க ஓரிரு தினங்களில் விடுதலையாவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரான்ஸ் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் காலை நாடு திரும்பியுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, திஸாநாயக்காவுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்வார் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-3)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

காரைநகர்,ஒக்.10

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடை பெறும் இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக் களங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-73)


### *தவறிவிட்டது*

யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் நவாலிக்கும் இடையில் செவஸ்ரின் தர்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இலக்கம் 792823874v மற்றும் மிக முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகுந்த சன்மானம் வழங்கப்படும்.*
**தொடர்பு: செவஸ்ரின் தர்சன்**
சுருவில் ஒழுங்கை,
நவாலி தெற்கு, மானிப்பாய்.
(26-45-18) T.P.:0776913173 (41177)



## தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல. ஜே/1591 - 06.03.72

எமது சங்கத்தில் மதில் (எல்லைச்சுவர்) கட்டட வேலைக்கு கூலிக்கு மட்டும் கூறுவிலை கோரப்படுகின்றது.

மதில் (எல்லைச்சுவர்) 7அடி உயரம்,மொத்த நீளம் 253 அடி
விண்ணப்ப முடிவு திகதி :20.10.2005

மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.சங்கத்தினால் வழங்கப்படும் கேள்வி கோரல் விண்ணப்பத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் வேலையின் 5வீதம் மீளளிப்புச் செய்யும் முற்பணமாகவும் செலுத்துதல் வேண்டும்.

*தலைவர்,*
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.
தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
(சி-45523) (19-26-45-18))



## எட்டாம் ஆண்டு நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

**மலர்வு** 28 - 02 - 1928



**உதிர்வு** 10 - 10 - 1997

### பேரருட் கலாநிதி டி.ஜெ.அம்பலவாணர்

*(முன்னாள் யாழ்.ஆதினப் பேராயர், தென்னிந்திய திருச்சபை)*

"விண்ணுலகில் உம்மையன்றி எனக்கிருப்பவர் யார்?
மண்ணுலகில் வேறு விருப்பம் உம்மையன்றி எனக்கேதுமில்லை"
(சங்கீதம்:73:25)

மிஷன் இல்லம்,
மானிப்பாய்.
(41154)(26-18-45)

உங்களை என்றும் மறவாத
**அன்புக் குடும்பத்தினர்.**


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கோவிந்தசாமி இராசம்மா



மீசாலை மேற்கைச் சேர்ந்த திருமதி கோவிந்தசாமி இராசம்மா 6.10.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கோவிந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னையா தம்பதியரின் அன்பு மகளும் செல்லமுத்து (கனடா), வேதவனம், இராசையா, சண்முகநாதன், மனோன்மணி, அற்புதநாதன் (பிரான்ஸ்), சறோயினிதேவி (பிரான்ஸ்), செல்வராணி, சுதந்திரநாதன் (பிரான்ஸ்), புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் கோகுலநாதன்(கனடா), இராஜேஸ்வரி, ஞானாம்பிகை, அமிர்தலோஜினி, கோஇளமுருகேசலிங்கம் (C.T.B.), மங்களஜோதி (பிரான்ஸ்), ஜெகதீசன் (பிரான்ஸ்), சிவசோதி, விஜயலட்சுமி (பிரான்ஸ்), செயந்திரராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் யமுனசீலி, ஜலசா, கிரிசா, சதாசீலன், வனசசீலி, சத்தியசீலன், கமலியா, கோமதன், நிரோஜன், வாகுலன், கஜிகுலன், கீர்த்தனா, பிரசாந்தன், கிரிசாந்தன், மேனகா, யசிந்தா உசாந்தன், நிவேதா, அருனேஸ், பிரசாந்தி, கஜேந்திரன், பிரிந்தன், கடோற்கஜன், நிதர்சனா, அபிராம், சுபினா, விஜிதன், யனோஜா, நிருஜா, அஜித்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2005) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு, மீசாலை.

தகவல்:
**கோவிந்தசாமி குடும்பத்தினர்.**

(41178) (19-26-18-45)

### கந்தையா சிவபாக்கியம்



வட்டு.கிழக்கைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவபாக்கியம் 6.10.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் ஜனந்திரனின் (சுவிஸ்) அருமைத் தாயாரும் தயாளினியின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன், குலசிங்கம், திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற நேசமலர் மற்றும் லீலாவதி, சௌந்தரநாயகி ஆகியோரின் மைத்துனியும் சஜீவன், சாதுகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்கரத்தை.**
தொ.பேசி :0777 180705 (41154) (19-26-18-45)

தகவல்:
**கஜன், சுரேஸ்**
*(மருமக்கள்).*

# தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள் இன்று: வன்னியில் சிறப்பு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

புதுக்குடியிருப்பு,ஒக்.10

தமிழீழப் பெண்கள் எழுச்சிநாளும் முதல் பெண் மாவீரர் லெப்ரினன்ட் மாலதியின் 18ஆவது ஆண்டு நினைவும் இன்று திங்கட்கிழமை வன்னிப் பிரதேசம் எங்கும் எழுச்சியுடன் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான நிகழ்வுகள் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெறும்.

காலை பெண்கள் சங்கம நிகழ்வு நடைபெறும். மாலை நிகழ்வு பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகும்.

வித்தியானந்தாக் கல்லூரியில் இருந்து மக்கள் அணிதிரண்டு மாலதி நினைவுத் தூபிவரை பேரணியாகச் செல்வர். அங்கு மாலதியின் தூபிக்கு மாலை அணிவித்தல், தேசியக் கொடியேற்றல் என்பவற்றைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அமைப்புகள் செய்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக ஏற்பாட்டாளர்கள் வெளியிட்டுள்ள குறிப்பு ஒன்றில், இன்றைய நாள் பெண்கள் தேச விடுதலையுடன் சமூக விடுதலையைப்பெறும் நாளாகும்.

''பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை, என்ற தேசியத் தலைவரின் கருத்துப்படி பெண் விடுதலைக்கு மட்டுமல்ல தேசிய விடுதலைக்கும் உரம் சேர்ப்போம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் சிறப்புடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.


புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள பெண்கள் அமைப்புகள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

அன்னையர் முன்னணி, பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம், கிராம மட்ட மாதர் சங்கங்கள், தேசிய எழுச்சிப் பேரவை என்பன எழுச்சி நிகழ்வைக் கொண்டாட முழு அளவில் செயற்பட்டு வருகின்றன.

பல பகுதிகளிலும், பொதுச்சுடரேற்றல், தேசியக் கொடி ஏற்றல், மாலதியின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தல், நினைவுரைகள் என்பன இடம்பெறும்.

இந்த நிகழ்வை முன்னிட்டு, வன்னியின் பல்வேறு பகுதிகள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

(த-353-204)



பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் ஐங்கரன் சனசமூக நிலையம் கட்டட வசதிகளின்றியும் தளபாட வசதிகளின்றியும் இயங்கிவருகின்றது. இந்தச் சனசமூக நிலையத்தைப் படத்தில் காணலாம். (படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

## புதிய பயிற்சிகள் ஆரம்பம்

பரந்தன்,ஒக்.10

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் புதிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஆரம்ப வைபவம் கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி பன்னங்கண்டி பொது நோக்கு மண்டபத்தில் நிறுவனத் தலைவர் க.சோதிமுருகேசு தலைமையில் நடைபெற்றன.

ஆரம்ப நிகழ்வாக 25 பயிற்சியாளர்களுக்கு மரவேலைப் பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பன்னங்கண்டி ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர், நிறுவன திட்ட இணைப்பாளர் ந.கௌதீபன், நிறுவன ஆசிரியர் க.யோகராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-352-202)

## வித்தியானந்தாக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று

ஒட்டுசுட்டான்,ஒக்.10

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் அமரர் ஏ.எவ்.கே.ஞானப்பிரகாசர் நினைவு தினமும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் பாடசாலையில் 2003ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றிப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதால் அந்த மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

(த-341-204)

## கல்மடுநகர் மூலிகைப் பண்ணையை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

வட்டக்கச்சி,ஒக்.10

கிளிநொச்சி கல்மடுநகரில் அமைந்துள்ள மூலிகைப் பண்ணையை மீள ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பண்ணையை மீள ஆரம்பிப்பதற்கான ஆரம்பக் கட்ட வேலைகள் பூர்த்தியாகியுள்ளன என்றும் - எதிர்வரும் 14 ஆம் திகதி மூலிகை நடுகைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டமானது சித்த ஆயுள்வேத மருத்துவ மூலிகை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், தமிழீழ சுகாதார சேவை, அரச அதிபர் பணிமனை, கண்டாவளைப் பிரதேச செயலகம் என்பவற்றால் கூட்டாக முன்னெடுக்கப்பட்டுவருகிறது. (த-405)

## சிறுவர், முதியோர்தின நிகழ்வுகள் வன்னியில் சிறப்புற நடைபெற்றன

ஒட்டுசுட்டான்,ஒக்.10

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு வன்னிப் பிரதேசத்தில் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் 'கே.டி.ஆர்.ஆர்.ஓ.' மற்றும் 'நெக்டோ', 'அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்' ஆகியவற்றின் கீழ் இயங்கும் 27 முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறார்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி, சந்திரன் பூங்கா வளாகத்தில் இருந்து முதியோர்களும் சிறுவர்களும் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் இ.ராசன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஆசியுரையினை கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் வழங்கினார்.

சிறப்புரையினை லோறன்ஸ் கிருஸ்லி நிகழ்த்தினார்.

முதியோர்களுக்கு சிறுவர்கள் மலர்மாலை அணிவித்துக் கௌரவித்தனர். தொடர்ந்து சிறுவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணியை நிர்வகிக்கும் சிறுவர் பூங்காக்களிலும் சிறுவர் தின நிகழ்வுகள் சிறப்புடன் நடைபெற்றன..

சிறுவர்களுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு விசேடமாக அமைக்கப்பட்ட பந்தல்களில் நிகழ்வுகள் நடைபெற்றன.

சிறுவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் கரைச்சிப் பிரதேசத்திற்குட்பட்ட சிறுவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் கரைச்சிப் பிரதேச பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (த-341-352-204)

## சாரணர் ஒன்றுகூடல்

முழங்காவில்,ஒக்.10

கிளிநொச்சி மாவட்ட சாரணர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இன்றும் ஒன்றுகூடல் தொடர்ந்துநடைபெறும்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றுவரும் இந்த ஒன்றுகூடலில் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் அனைத்து பாடசாலைச் சாரணர்கள், சாரணர்குழுத் தலைவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டுள்ளனர். (எ-323)




## விதை உற்பத்தியை ஊக்குவிக்க கிளிநொச்சியில் சங்கம் அமைப்பு

பரந்தன்,ஒக்.10

கிளிநொச்சி மாவட்டத்தில் விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் விதை உற்பத்தியாளர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

உணவு விவசாய ஸ்தாபனத்தின் விதை உற்பத்தித் திட்டத்தின் கீழ் விதை உற்பத்தியாளர் தெரிவுசெய்யப்பட்டு இச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் முதலாவது சந்திப்பு கடந்த 16ஆம் திகதி கிளிநொச்சி விதை அத்தாட்சிப்படுத்தும் அலுவலகத்தில் விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.சதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ.ஆனந்தராசா, கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி பி.நாமகள், விதைகள் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர் ஏ.ரமணீதரன், பரந்தன் பண்ணை முகாமையாளர் சி.சிறீதரன், உணவு விவசாய ஸ்தாபன கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஈ.எம்.பாலசுப்பிரமணியம், கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புகளின் தலைவர் சு.மனோகரன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ச.விநாயகமூர்த்தி, விதை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் நெல் மற்றும் மறுவகைப் பயிர்களின் உற்பத்திக்கு தரமா[illegible] நல்லின விதைகள் இல்லாமையால் வி[illegible]சாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதனைக் கருத்தில் கொண்டு விதை உற்பத்தியாளர் சங்கம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-352-202)

## பெரியோருக்கான கணனிக் கற்கை நெறி

ஒட்டுசுட்டான்,ஒக்.10

இளையோர் திறன் விருத்தி நிறுவனத்தின் கணனிப் பயிற்சி நிலையத்தில் பெரியோர்களுக்கான கணனிக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கணனிக் கற்கையை மேற்கொள்ள விரும்புவோர் நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

நேர்முகத் தேர்வுகள் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிலையத்தில் நடைபெறும் என்றும் தமிழீழ மாணவர் அமைப்பினர் தெரிவித்தனர்.

(த-341-202)

## மாற்று வலுவுடையோருக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

வட்டக்கச்சி,ஒக்.10

கிளிநொச்சி, மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரால் மாற்றீடான வலுவுள்ளோருக்கான ஆதார உபகரணங்கள் வழங்கப்பட்டுவருகின்றன. இதன் முதற்கட்டமாக கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கு கடந்த மாதம் 28ஆம் திகதி சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதன்போது 30 பயனாளிகளுக்கு ஊன்று கோல்களும் 5 பயனாளிகளுக்குச் சக்கர நாற்காலியும் 3 பயனாளிகளுக்கு நடைபழகும் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதே உபகரணங்களைக் கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்வுகள் அந்தந்தப் பிரதேச தொடர்பகங்களில் இடம்பெறும் என சங்கத்தினர் தெரிவித்தனர்.

(த-405)




தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்ரன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272

அந்திரங்களில் நடக்கு சுனாமி நிதி மோசடிகளை அம்பலப்படுத்துவோம்.

வாசியுங்கள் 'நமது செய்தி'

**LUXURY HOUSE WITH ALL MODERN FACILITIES AVILABLE FOR RENT**
**N.G.Os ONLY**

An upstairs' house situated at 44/20,Sangiliyan road, Nallur. adjacent to the Nallur Kandasamy temple in 14 lachams of land with all modern facilities including garage is available for rent.

*Please contact telephone numbers:*
*021 222 9055,*
*0773 - 054974,*
*0779-179919.* (40912)(46)

## பளை புனர்வாழ்வு கழகத்தில் சிறப்புற நடந்த சிறுவர் தின நிகழ்வு

தென்மராட்சி, ஒக்.10

சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வுக் கழகத்தினால் நடத்தப்பட்டன.

பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வுக் கழகத்தினால் நடத்தப்படும் முன்பள்ளிகளில் கல்வி பயிலும் 452 சிறார்கள், பெற்றோர்கள் உட்பட ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட னர்.

பிரதேச கட்டமைப்புத் தலைவர் வ.ஜீவரத்தினம் தலைமையில் கழக மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் பொதுச் சுடரினைப் பளைப் பிரதேச செயலர் எஸ். சிவசிறியும், தேசியக் கொடியினை பளைக் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்தனாவும்-

மாவட்ட புனர்வாழ்வுக்கொடியினை புனர்வாழ்வுக் கழக மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.ரஜனியும்,பச்சிலைப் பள்ளி புனர்வாழ்வுக் கழகக் கொடியினை கழகத் தலைவர் வே.கந்தசாமியும் ஏற்றிவைத்தனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட சிறார்கள் பளை இரட்டைக் கேணி கண்ணகை அம்பாள் ஆலயத்திலிருந்து விழா மண்டபத்திற்கு வாத்திய சகிதம் அழைத்துவரப் பட்டனர்.

நிகழ்வில் பிரதேச செயலர் எஸ். சிவசிறி, பிரதேச சபையின் செயலாளர் இ.து.சிவராசா மற்றும் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அதிகாரி,பளை வைத்திய அதிகாரி, பளை வர்த்தகசங்கத் தலைவர் அமீர் உட்படப் பலர் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சிறார்களுக்குப் பரிசில்கள் வழங்கப் பட்டன.

(எ-117)


# தமிழீழ வைப்பகம்
## பணிநிலை வேண்டுகை

**தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

**01. பணிநிலை:- அலுவலர் (பயிலுநர்)**

தகைமைகள்:- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் தொழில் நிர்வாகமாணி (BBA) / வணிகமாணி (B.Com.) / விஞ்ஞானமாணி (B.Sc.)பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் வங்கியியல் பட்டப்படிப்பை (Diploma in Banking) நிறைவுசெய்தவராக இருத்தல் வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- **4,500 + 6,000**

அகவை எல்லை:- 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

**02. பணிநிலை:- கணக்காய்வாளர் (பயிலுநர்)**

தகைமைகள்:- ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா (HNDA) கற்கை நெறியில் / உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (HNDM) கற்கை நெறியில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- **3,500 + 6,000**

அகவை எல்லை:- 32வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

**03. பணிநிலை:- உத்தியோக உதவியாளர் தரம் - 03**

தகைமைகள்:- க.பொ.த. (சாதாரண தர) தேர்வில் கணிதம் 42/ கணிதம் II, தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் க.பொ.த. (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- $\frac{3,670 - 5,070}{70x20}$ + 6,000

அகவை எல்லை:- 19 - 25 ஆண்டுகள்

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல்மூலையில் "*ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - அலுவலர் (பயிலுநர்), ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - கணக்காய்வாளர் (பயிலுநர்), ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - உத்தியோக உதவியாளர், தரம் 03*' எனக் குறிப்பிடப்பட்டு 2005-10-31ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேற்கூறிய விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**மனிதவள மேலாளர்,**
**மனிதவளப் பகுதி,**
**நடுவப் பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு:-
- முழுமையாக நிறைவுசெய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.
- நிறைவுசெய்யப்பட்ட வேண்டுகைகளைப் பதிவுத் தபாலில் (**மனித வள மேலாளர், மனிதவளப் பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், இரத்தினம் மேல் மாடி, யாழ். சாலை, கிளிநொச்சி** எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

(சி/44450) (24-45-15)



## அகம் கனிந்த நல்வாழ்த்துக்கள்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 07-10-2005 வெள்ளிக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது கௌரவ கலாநிதி பட்டம் பெற்ற எமது பிரிவு சுகாதார வைத்திய அதிகாரியான வைத்திய கலாநிதி

செல்வி
**நவமலர் கனகரத்தினம்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல சிறப்புக்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள்,ஊழியர்கள்,**
**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,**
**தெல்லிப்பழை.**

(சி/45536)(46-18-13)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2004ஆம் ஆண்டு வலய மட்டத்தில் நடத்தப்பட்ட சிறந்த ஆசிரியர் தெரிவில் எமது மூத்த ஆசிரியர்
**திரு.து.ஜெயவீரசிங்கம்**
அவர்கள் சிறந்த ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு 2005 ஆசிரியர் தினத்தன்று வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் கௌரவிக் கப்பட்டதையிட்டு நாமும் பெருமையுடன் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

**பாடசாலைச்சமூகம்,**
**யா/புற்றளை மகா வித்தியாலயம்**
**புலோலி.**

(41126)(46-18-13)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*06-10-2005* இல் யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணி B.A .(Hons) பட்டம் பெற்ற
**தளையசிங்கம் வித்யா**
அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்றுசிறப்புறவாழவாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
கைதடி மேற்கு, பா.குலசிங்கம் *(சித்தப்பா குடும்பத்தினர்),*
கைதடி (41173)(46-18-13) க.கோபால் *(மாமா குடுபத்தினர்).*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



7.10.2005இல் நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வியாபார முகாமைத்துவமாணி (B.B.A.) பட்டம் பெற்ற
**சத்தியநேசன் நிலோஜன்**
அவர்கள் மேலும் பட்டங்கள் பலபெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாரதிதாசன் சனசமூக நிலைய**
**நிர்வாகத்தினரும்**
**மக்களும்.**

*உரும்பிராய் கிழக்கு,*
*ஊரெழு.* (41174)(46-18-13)



# ஈழத் தமிழர்களின் விடுதலையில் மாலதி என்றோர் அத்திபாரக் கல்!

**தமிழீழ மகளிர் எழுச்சி தினமும் முதலாவது பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் 18 ஆவது ஆண்டு நினைவு தினமும் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை யொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

**1987**ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி அந்த வரலாற்று நிகழ்வு கோப்பாய் பகுதியில் நடந்தது. ஈழத்தமிழர்களுடைய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதலாவது பெண் மாவீரராக கோப்பாய் மண்ணில் விதையாகிப் போனாள் மாலதி.

இலட்சியப் போராட்டத்தோடு பெண்கள் தங்களை அதிகளவில் இணைத்துக்கொள்வதற்கும் மாலதியின் அந்தத் தியாகமே வித்திட்டது எனலாம்.

போராட்டக் களங்களில் போராளிகள் சாதுரியம்மிக்க, நேர்த்தியான, துணிச்சலான முடிவுகளை எடுக்கவேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்து காட்டியவர் 2ஆம் லெப்.மாலதி.

கோப்பாய் - கைதடி வீதியில் கோப்பாய் சந்தியை அண்டியதாக உள்ள வெளிப் பகுதியில்தான் அன்றைய அந்தச் சம்பவம் நடந்தது.

இந்தியப் படைகளுடனான போர் தொடங்கிய கையோடு விடுதலைப் புலிகள் மக்களோடு மக்களாக நின்று கெரில்லா யுத்தத்தை தீவிரப்படுத்தியிருந்தனர்.

அத்தகைய ஒரு கெரில்லா தாக்குதலுக்கு புலிகளின் மகளிர் அணி ஒன்று கோப்பாய் வெளியில் நின்றிருந்தது.

அந்த அணியில் ஒருவராக அன்று 19 வயதுடைய மாலதியும் தயாராகியிருந்தார்.

இந்திய இராணுவக் காலத்தில் விடுதலைப் புலிகளிடம் ஆட்பலம் போதுமான அளவில் இருக்கவில்லை. ஆயுதபலமும் மிகவும் குறுகியதாகவே இருந்தது. அந்த நிலையில் போராளிகள் ஒவ்வொருவரும் தங்களுடைய உயிரிலும் மேலாக தமக்கு வழங்கப்பட்டிருந்த ஆயுதங்களை மதித்தார்கள்.

கோப்பாய் வெளியில் நடந்த சண்டையில் மாலதிக்குக் காலில் காயம் ஏற்படுகிறது. அப்போது சக போராளிகள் அவரைத் தூக்கிச் செல்வதற்கு முயல்கிறார்கள். ''... நான் குப்பியைக் கடிச்சிட்டன், என்ர ரைபிளைக் கொண்டு போய் அண்ணையிடம் கொடுங்கள்..'' என்று அந்த 19 வயதுடைய யுவதி தனது தோழிகளிடம் கூறுகிறார்.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதலாவது பெண் மாவீராக தன்னை அர்ப்பணித்து கொண்ட மாலதியினுடைய அந்த முடிவு என்றுமே மறந்துவிட முடியாதது. போராட்ட அனுபவங்கள் குறைந்த - வெறுமனே 19வயதே நிரம்பிய ஓர் இளம் பெண் அந்தக் காலகட்டத்தில் தான் வரித்துக்கொண்ட கொள்கைக்காக சயனைட்டை உட்கொண்டு எதிரியிடம் பிடிபட முன்னரே இறந்துவிட நினைத்ததும், தான் சார்ந்த விடுதலை அமைப்பின் ஆயுதப் பலத்தில் சிறிதளவேனும் சரிவு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக தன்னிடமுள்ள ஆயுதத்தை எதிரியிடமிருந்து பாதுகாக்க முயன்றதும் சாதாரண விடயங்கள் அல்ல.

போராட்டம் பரந்துபட்ட பரிணாமங்களைக் கண்டு வளர்ச்சி பெற்றிருக்கின்ற இன்றைய நிலையில் இவையெல்லாம் சாத்தியமாகிப்போனாலும் கூட அன்றைய காலகட்டத்தில் ஒரு பெண் இத்தகைய முடிவை எடுத்திருந்தது வரலாற்றில் பதியப்பட வேண்டியதே.

இன்று எமது சமுதாயத்தில் பெண்கள் மீதான சமூக அடக்கு முறைகளும், அவர்களை ஒடுக்குவதற்கான மூட நம்பிக்கைகளும் கணிசமான அளவு அற்றுப்போய்விட்டன.

முன்பு பெண்கள் தமது திறமைகள், ஆற்றல்கள், ஆளுமைகள், வீர தீரங்களை வெளியில் கொணர்வதற்கு சமூகத்தில் நிலவிய மூட நம்பிக்கைகள் தடைபோட்டன; தேவையற்ற பண்பாட்டு இறுக்கங்கள் இடையூறாக இருந்தன.

ஆனால், அவற்றை உடைத்தெறிந்து ஆண்களுக்கு நிகராக ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு பெண்கள் தயாராகி முன்வந்தபோது ஈழப் பெண்களின் வரலாற்றில் புதியதொரு சகாப்தம் பிறப்பெடுத்தது.

கடந்த சில தசாப்தங்களுக்கு முன்னர் ஈழத்தமிழ்ப் பெண்கள் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளில் பங்கெடுத்துக் கொள்ளாதவர்களாக - முக்கியத்துவம் அற்றவர்களாக இருந்தார்கள். மேலை நாடுகளில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் மதிக்கப்படுகின்ற சமத்துவ உணர்வு பல தசாப்தங்களுக்கு முன்பே இருந்து வந்தது.



பல தசாப்தங்களுக்கு முன்னர் சுதந்திரம் பெற்ற - சமத்துவம் பெற்ற - மேலைத்தேயப் பெண்கள் ஒருசில தசாப்த வளர்ச்சியையே கொண்ட ஈழத்தமிழ்ப் பெண்களின் சாதனைகளையும் தியாகங்களையும் பார்த்து வியந்து நிற்கிறார்கள். இத்தகைய மாற்றத்துக்குக் காரணம் எமது தமிழர் படையில் பெண்கள் செய்திருக்கின்ற - செய்துகொண்டிருக்கின்ற வீர தீரங்களே.

அடங்கியிருந்த பெண்கள் தம்மைச் சுற்றியிருந்த சிறையை உடைத்தெறிந்து கொண்டு வெளியே வருவதற்கு வித்திட்டவர் தலைவர் பிரபாகரன்.

மாலதியின் வழியில் இன்று வரை எமது பெண்கள் படைத்திருக்கின்ற சாதனைகள் ஏராளம். உலகப் பெண்ணினத்துக்கே முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டிய ஈழத்தமிழ் மங்கைகள் ஆயிரக்கணக்கில் கல்லறைகளில் உறங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

கரும்புலிகளாக, தரைப்புலிகளாக, கடற்புலிகளாக பல்வேறு பரிணாமங்களில் பெண்கள் வீரசரிதம் எழுதியிருக்கிறார்கள்.

இருந்தாலும் இன்றைய எமது தமிழ்ப் பெண்கள் பலர் உண்மைப் புற நிலைகளை உணராதவர்களாக - மேலை நாட்டவர்களைப் போல வெறுமனே ஆடம்பரத்திலே மோகம் கொண்டவர்களாக - வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; வாழத்துடிக்கிறார்கள். உலகப் பெண்ணினமே 'வீரப் பெண்களின் நாடு' என்று ஈழத்தை வியந்து பார்த்திருக்கின்ற வேளையில் எமது பெண்களில் ஒரு பகுதியினர் மேலைநாட்டவர்களைப் போல ஆடம்பர நாடிகளாக வாழ நினைப்பது வேதனைக்குரியது.

**அலங்காரன்**

ஈழத்தில் இன்னமும் பெண்களுக்கு முழுமையான விடுதலை கிடைத்துவிடவில்லை என்பதை எமது பெண்ணினம் கருத்தில் எடுக்கவேண்டும்.

எமது தேசம் விடுதலை அடைகின்றபோதுதான் பெண் விடுதலையும் சாத்தியமாகின்றது.

ஆகவே, தேசத்தின் விடுதலைக்காகவும், அதன்மூலமான பெண்விடுதலைக்காகவும் ஒட்டுமொத்தமான தமிழ்ப் பெண்களும் பாடுபடவேண்டியது அவசியமாகின்றது.

பெண்களில் ஒரு பகுதியினர் ஒட்டுமொத்த இனத்தின் சுதந்திர வாழ்வுக்காக தங்களின் சுயமான வாழ்வியல் இன்பங்களைத் தியாகம் செய்து- தமது கழுத்தில் நஞ்சைக் கட்டிக் கொண்டு எழுந்து நிற்கின்றபோது, மற்றொரு பகுதியினர் எந்தவிதமான சமூகச் சிந்தனைகளும் இல்லாதவர்களாக, ஆடம்பர விரும்பிகளாக, சமூகச் சீரழிவுகளுக்கு வழிவகுப்பவர்களாக இருப்பதென்பது வேடிக்கைக்குரியது.

இந்த நிலையை உணர்ந்துகொண்டு பெண்கள் அனைவரும் மேலைநாட்டு மோகத்திலிருந்து விடுபட்டு எமது பண்பாட்டு விழுமியங்களைக் காப்பாற்ற வேண்டும். இனவிடுதலைக்கான - பெண்விடுதலைக்கான தமது பங்களிப்பை உறுதிசெய்து எழுச்சிகொள்ள வேண்டும். ✱


உங்கள் விமானப் பயணத்திற்கு!

Aero Lanka

In Domestic Operation



New way of flying

Head office
No.500,Galle Road.
Wellawatte.
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86,PointPedro Road.
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47,Kandy Road.
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு


## வலைபந்தாட்ட அணித் தெரிவு இன்று

யாழ்.மாவட்ட வலைபந்தாட்டச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையே நடைபெறவுள்ள வலைபந்தாட்டப் போட்டி அணித் தெரிவு இன்று திங்கட்கிழமை மாலை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பதிவுசெய்யப்பட்ட கழகங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களை இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நேரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு ஒத்துழைக்குமாறும் -

விண்ணப்பங்களை அனுப்பிவைக்காத விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்தவர்கள் நேரடியாக இன்று வருகைதந்து விண்ணப்பங்களை கையளிக்கலாம் என்றும் யாழ். மாவட்ட வலைபந்தாட்டச் சங்கத் தலைவர் திருமதி ரூபசிங்கம் தெரிவித்துள்ளார். (3-203)

## இருபாலையில் திருடர் தொல்லை

இருபாலைப் பிரதேசத்தில் திருடர் தொல்லை அதிகரித்துள்ளது என்று பொது மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் நள்ளிரவு வேளைகளில் வீடுகளுள் நுழையும் திருடர்கள் பெறுமதிமிக்க பொருள்களை திருடிச்சென்று விடுகின்றனர் . இதனால் இத்தகைய திருட் டுச் சம்பவங்களைத் தடுக்கும் வகையில் இப்பகுதி மக்கள் விழிப்புக்குழுக்களை அமைப்பதில் ஆர்வங்காட்டி வருகின்றனர். (எ-72)

## வாராந்த நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் சைவ, கலை பண்பாட்டுப் பேரவை வாரந்தோறும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, திரு இருதயக் கல்லூரி மாணவர்கள் இணைந்து வழங்கும் மாணவர்களின் பஜனை நிகழ்வு இடம் பெறும். (எ-173)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

07.10.2005 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணிப் பட்டம் (B.BA.) பெற்ற



ஞா.இராசா
கூழாவடி,
ஆனைக்கோட்டை.

**செல்வி இராசா டெனிற்றா**

அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

பெற்றோர் : இராசா-பத்திமா,
பேரன், பேர்த்தி : அருளானந்தம் மேரிப்பிள்ளை,
மாமாமார் : சிறி(பிரான்ஸ்),
சந்திரா (லண்டன்),
ராஜ் அண்ணா (பிரான்ஸ்),
சித்திமார் : இராசமலர், ராணி(ஜேர்மனி),
சித்தப்பாமார், சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள். (41199) (22-11-34)



## அன்புக்குரிய பிரஜைகளே,

ஹெட்டிகொட கூட்டு நிறுவனங்களில் இருந்து 2005 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 ஆம் திகதி முதல் விலகி உள்ளேன்.

ஆகையினால் சகல பிரஜைகளும் தங்கள் வியாபார விவகாரங்களை நிறுவனத்தின் இயக்குநர் சபையுடன் நடத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி
உங்கள் உண்மையுள்ள,
சித்தாலேப வைத்தியர்,
விக்டர் ஹெட்டிகொட



## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி சற்குணலிங்கம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சற்குணலிங்கம் 09.10.2005 ஞாயிறு காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய முத்துக்குமாரசாமி சற்குணலிங்கம் அவர்களின் மனைவியும் நிர்மலாதேவி, தவமலர், கணேஸ்வரன் (F.O.இரத்தினபுரி), இந்திரகுமார் (இராசா டீசல் எஞ்சினியர்ஸ்), புவனேஸ்வரன் (வேம்படி மகளிர் கல்லூரி), திருமதி சோதிநாயகி (Swiss), திருமதி லிங்கேஸ்வரி (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்துலதா (இரத்தினபுரி), விக்னேஸ்வரி, சித்திரா, பாஸ்கரன் (Swiss), ரட்ணராஜ் (U.K) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.10.2005 செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*நீர்வேலி தெற்கு.* ச.இந்திரகுமார் *(மகன்).*



## அதிரடி விலைக் கழிவில்



ரூ.10,000/= மட்டும்

வீடுகளில், அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய முறையில் டயலொக் G.S.M., மொபிரெல் G.S.M. மேசைத் தொலைபேசிகள் பூட்டித் தரப்படும். டயலொக் 500/=, மொபிரெல் 300/= பைக்கேஜ் இணைப்புகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.

*தொடர்புகளுக்கு:*

**பவர் செலுலர் டிரேடிங் கம்பனி**

205/01, கஸ்தூரியார் வீதி (ராஜா தியேட்டர் அருகில்), யாழ்ப்பாணம்.
T.P.: 07112 - 399220, 0714 - 182500, 0773518330

(அ/45468) (22-11-34)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06-10-2005 வியாழக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில்
B.A. பட்டம் பெற்ற
செல்வி **தயாளினி பாலசிங்கம்**
அவர்களை மேன்மேலும் கல்வியில் உயர்ந்து
பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

திரு. சுந்தரம் தம்பித்துரை குடும்பம்,
டாக்டர் அ.ஜெயக்குமரன் குடும்பம்.

(41176)(26-19-13)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தென்மராட்சி கல்வி வலயத்தில்
நல்லாசிரியர்களில் ஒருவராகத் தெரிவு
செய்யப்பட்டு கல்வி அமைச்சின் விருதைப்
பெற்ற எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி **ச.நவரத்தினராசா**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/கொடிகாமம் அரசினர்
வித்தியாலயம்,
கொடிகாமம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(41118)(46-26-19-13)

## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற
எமது சக ஆசிரியர்களான

திரு.கே.துஷ்யந்தன் (தமிழ்மொழி)
திரு.த.மோகன் (கணிதம்)
செல்வி க.கண்மணி (சமூகக்கல்வி)

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்தி மென் மேலும் சிறப்புப் பெற்று
வாழ வாழ்த்துகின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கலையகம் கல்வி நிறுவனம்- ஆவரங்கால்.

(41148)(46-26-19-13)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



[B.B.A. (H.R.M) Spe] 7-10-2005
அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
பட்டம் பெற்ற எமது விளையாட்டுக் கழக
அங்கத்தவராகிய
**பாலசிங்கம் பார்த்தீபன்**
[B.B.A. (H.R.M) Spe]
மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

நாவலி றோட் முதலாம் ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

**கலைஒளி விளையாட்டுக் கழகம்,**
ஆனைக்கோட்டை.

(41146)(26-19-13)

## மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது சமூகக்கல்வி ஆசிரியரான
**திரு.குமாரு சுதாகரன்**
06.10.2005 யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம்
பெற்றதையிட்டு மிகமகிழ்வடைகின்றோம்.
அவர் மென்மேலும் சிறப்புப் பட்டங்கள் பெற்று வாழ்வில்
உயர வேண்டும் என்று வாழ்த்துவோம்....

பல்கலை வகுப்பு
பிரிவு II மாணவர்கள்,
**விக்னா கல்வி நிறுவனம்.**

(41139)(19-26-13)

## பாராட்டி வாழ்த்துகிறேன்



அ.வஜிகரன்
B.B.A (Hons)



அ.அனிதன்
B.A.

யாழ்.பல்கலைக்கழக 24ஆவது பட்டமளிப்பு விழாவில்
பட்டம் பெற்ற எனது நண்பர்களான வஜிகரன், அனிதன் ஆகியோரை
மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றேன்.

(41125)(46-26-19-13)

நண்பன்- R.மயூரன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி பத்மவேணி கணேசமூர்த்தி**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால்
முதுகலைமாணிப்பட்டம் வழங்கிக் கௌர
விக்கப்பட்ட எமது ஆசிரியை
**செல்வி பத்மவேணி கணேசமூர்த்தி**
அவர்களைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி
அடைகிறோம். கல்வித்துறையில் இவர்
மென்மேலும் சிறந்து விளங்க மனமுவந்து
வாழ்த்துகின்றோம்

**ஆசானவை,**
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

(41043)(46-26-19-13)


# வாணி விழா நிகழ்வுகள்

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்று வரும் வாணிவிழாவில் இன்று திங்கட்கிழமை மாலை 5.25 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபைஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் கலந்து கொள்வார்.

நிகழ்வில் எஸ்.கிருஸ்ணானந்தனின் இசைக்கச்சேரி இடம்பெறும். வயலின் ஜனனி நல்லைநாதன், மிருதங்கம் - வி.ரமணன், கடம் - எ.செல்வரத்தினம், முகர்சிங் - எஸ். விமல்சங்கர் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு 'வெள்ளைக்கமலத்திலே...' எனும் கவியரங்கம் இடம்பெறும். கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கவியரங்கில் தி.திருக்குமரன், இ.சு.முரளிதரன் நா.க.சிவசிதம்பரம், பா.மகாலிங்கம் ஆகிய கவிஞர்கள் பங்கேற்பர்.

இரவு 7.30 மணிக்கு பொன்னாலை பரத கலாலயம் வழங்கும் நாட்டியாஞ்சலி இடம்பெறும். அணிசெய் கலைஞர்களாக நட்டுவாங்கம் - திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, பாட்டு- பங்கயற்செல்வி முருகந்தன், வயலின்- எ.ஜெயராமன் ஆகியோர் பங்கேற்பர். (எ-202)

* * *

வலி.தெற்கு.ஒக்.10

வலிகாமம் கல்விவலய நலன்புரிக் கழகத்தினரால் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு வாணி விழா கொண்டாடப்படவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் வாணி விழா நிகழ்வுகள் இடம்பெறும்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள வாணிவிழாவில் விசேட பூசைகளைத் தொடர்ந்து சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும். (எ-152)

* * *

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும், பாலர் வகுப்பும் இணைந்து நடத்தும் வாணி விழா இன்று திங்கட்கிழமை பி.ப.2 மணிக்கு தலைவர் திருமதி கோமளவல்லி தங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் பூஜை ஆராதனைகளை சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் நடத்துவார். (எ-29)

## பெரும்போகச் செய்கை: நவாலியில் சந்திப்பு

நவாலி,ஒக்.10

பெரும்போக நெல்விதைப்புத் தொடர்பாக நவாலி விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த விசாயிகளுக்கான சந்திப்பு அண்மையில் நவாலி வை.எம். சி. ஏ.மண்டபத்தில் நடைபெற்றது.

உதவில் பெரும்பாக உத்தியோகத்தர் ஆர்.சோதிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பெரும் விதைப்பில் பயிரிடப்படும் நெல்லினங்கள், கட்டாக்காலிக் கால் நடைகள் கட்டப்படும் காலம், கட்டாக்காலிகளைப் பிடிப்பவர்கள் நியமனம், கட் டாக்காலிகளைப் பிடிபதற்கு அறவிடப்படும் கட்டணம் போன்றவை குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நவாலி கிழக்கு நவாலி தெற்கு நவாலிவடக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.(எ-100)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தின்
பட்டமளிப்பு விழாவில்
சமூகவியல்
சிறப்புப்பட்டம் பெற்ற
**இரத்தினம் கமலன்**
கலைமாணி B.A. (Hons)
அவர்களை மேலும்
பல பட்டங்களைப் பெற
வாழ்த்துகின்றோம்.



(சி/45532) (24-26-13-18)

பெரியண்ணா குடும்பத்தினர் (திரு.திருமதி பிரேமராஜா - டென்மார்க்).
சின்னண்ணா (கஜன் -பிரான்ஸ்).

## 08.10.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 300624052 இலிருந்து
300641270 வரை

சீட்டிழுப்பு இல. 1648

வெற்றி எண்கள்
**13 35 62 66**
சுப்பர் எண் **06**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.55,27,250/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 55,27,250/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 37 | 5,000/- | 1,85,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 456 | 1,000/- | 4,56,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,461 | 500/- | 7,30,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,085 | 40/- | 8,83,400/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,892 | 20/- | 4,17,840/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,14,065 | 10/- | 31,40,650/- |
| | | மொத்தம் | 78,13,390/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 83,13,390/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 63,66,150/-

தொடர் இல. 200673138 க்கு மேற்பட்ட ஷனிதா நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 12 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

| | |
|---|---|
| மொறட்டுவை | 300633765-6-91 |
| ஹம்பாந்தோட்டை | 300631017-6-85 |
| அம்பாறை | 300635054-6-25 |
| காலி | 300630236-5-72 |
| கொழும்பு | 300624283-3-56 |

இல. 33,செயின்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## யப்பான் சைக்கிள்



அறியாமையினால் தரமற்ற சைக்கிள்களை வாங்கி ஓடுவதற்கு கஸ்டப்படுவதும் அழக்கழி திருத்துவதுமாக துன்ப்படுகிறீர்களா? வாருங்கள் சித்திவிநாயகருக்கு தரமான யப்பான் சைக்கிள் ஒன்றை வாங்குங்கள் உங்கள் துன்பமெல்லாம் நீங்கி விடும்.

இப்பொது அறிவு உள்ளோரின் தெரிவு யப்பான் சைக்கிளே
வதந்திகளை நம்பவேண்டாம் ரயர், ரியூப் உட்பட சகல விதமான உதிரிப்பாகங்களும் உண்டு.

**சித்திவிநாயகர்**
யப்பான் சைக்கிள் பசார்
631 KKS றோட்
யாழ்ப்பாணம்.
(பன்றிக்கோட்டு பிள்ளையார் கோவிலுக்கருகில்)

(41141)(11-45-52)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பொ.கேதீஸ்வரன்
B.A HONS



கு.ஜொட்செல்வராசா
B.A.HONS

யாழ்.பல்கலைக்கழகத்தின் 24 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் பெற்ற எமது கல்வி நிலையத்தின் ஆசிரியர்களான திரு.பொ.கேதீஸ்வரன் B.A.(HONS), திரு. கு.ஜொட் செல்வராசா B.A.(HONS), செல்வி ச.கவிதா B.A.(HONS), செல்வி கு.சோமளா B.COM ஆகியோரைப் பாராட்டி உளமார வாழ்த்துவதோடு, மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் விளங்க இறைவனை வேண்டுகின்றோம்.



ச.கவிதா
B.A.HONS



கு.சோமளா
B.A.HONS

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்
**வீனஸ் கல்வி நிலையம்**
சந்நிதி வீதி, அச்சுவேலி.

(சி/45537)(26-19-13)

## மிருதங்க, தபேலா அரங்கேற்றம்



பிரவீன் சண்முகநாதன் (மிருதங்கம்) பிரசாந் சண்முகநாதன் (தபேலா)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு திரு. திருமதி அருளம்பலத்தினதும் பிரம்படி அரசநாயகத்தினதும் பேரன்மார்களும், சண்முகநாதன் - சுஜாந்தி தம்பதியரின் புத்திரர்களுமாகிய பிரவீன் சண்முகநாதன், பிரசாந் சண்முகநாதன் ஆகியோரின் மிருதங்க, தபேலா அரங்கேற்றம் ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு Armenian Youth Community Centre, 50, Holl Crown Place Toronto (Hwy 401 and Victoria Park at Consumer Road) கனடாவில் நடைபெற்றது. இளம் கலைஞர்கள் மென் மேலும் பிரகாசித்து விளங்க வாழ்த்துகின்றோம்.

(41206) (46-54-34-12)

யாழ்ப்பாணத்தில் வாழ்த்துபவர்கள்:
அப்பப்பா - ஆ.அருளம்பலம், மாமா, மாமி - திரு.திருமதி ஜெகன், வசந்தி குடும்பம், திரு. திருமதி குகன், ராஜேஸ்வரி குடும்பம், திரு. திருமதி பாலா சந்திரேஸ்வரி சித்தப்பா, சித்தி - திரு.திருமதி சந்திரகுமார் லதா. மச்சாள்மார் - ஆரி, சாம்பவி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



டாக்டர் பகீரதனின் அன்பு மனைவி
**டாக்டர் விஜிதா பகீரதன்**
யாழ். பல்கலைக் கழகத்தில் 07-10-2005 நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
**சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணி**
பட்டம் பெற்றதற்காக மருத்துவத் துறையில் இவர் மேலும் பட்டமும் புகழும் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்.

சிவகலை, ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
(41203) (54-34-12)
திரு. திருமதி கந்தசாமி குடும்பம் (சித்தப்பா).


**பேராசிரியர் என். சண்முகலிங்கன்**




**இசைக்கனிவான நவராத்திரி கால பாடல்கள்**
*(சகலகலா வல்லிமாலை)*
சிறப்பு விலைக் கழிவுடன் C. D, கசற் விற்பனையாகின்றது.
இசை உலகம் Music World
பலாலி வீதி, தபால் பெட்டி சந்தி, திருநெல்வேலி. (41204) (54-34-12)

## யாழ். நகரில் அலுவலக பாவனைக்கு வீடு/கடைத்தொகுதி தேவை

யாழ். நகரில் அல்லது அதனை அண்டிய பிரதேசத்தில் (தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் தனியார் வர்த்தக நிலைய அலுவலக பாவனைக்கு பயன்படுத்த) வாடகைக்கு வீடு/கடைத்தொகுதி தேவைப்படுகிறது. நேரிலோ, தொலைபேசியிலோ, மின்னஞ்சலூடாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி: 077 653 0191, 021 228 5875, 021 228 5876
மின்னஞ்சல்: techshack@vanni.org
பணிப்பாளர், ரெக்ஷாக் - வன்னிரெக், வன்னி தொழில்நுட்ப நிறுவகம், கிளிநொச்சி. (40990) (54-34-12)


## கண்ணீர்க்காணிக்கைகள்

எமது நண்பன் ம.துவாரகன் அவர்களின் அன்புச் சகோதரி



**தனுஷா மாதவராஜா**
[2ஆம் வருட கலைப்பீடம் - யாழ். பல்கலைக்கழகம்]
அவர்கள் 07.10.2005இல் இறைபதம் அடைந்த செய்திகேட்டு நாம் ஆழ்ந்த கவலை அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(41186) (54-34-12)
2005 A/L நண்பர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



மலர்வு 21-05-1921 உதிர்வு 15-09-2005

அமரர்
**வள்ளியம்மை (நாகம்மா) கந்தப்பு**

அவர்களின் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 13.10.2005 வியாழக்கிழமை முற்பகல் 10-12 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்களை பங்குபற்றி மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Mr.& Mrs. V. Subramaniam
(முன்னாள் விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை, ஹாடி தொழில்நுட்பக்கல்லூரி,
Mr. Mrs. Sivasothy.

*சிவபவனம், யாழ் வீதி, மக்கள் வங்கி முன்பாக, நெல்லியடி, கரவெட்டி.*
(41026) (54-34-12)

# நெடுந்தீவுப் பாடசாலை பரிசளிப்பு விழா

நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் நவராத்திரிவிழாவும் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பாடசாலை அதிபர் ச. சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி சோ. தில்லைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

பரிசளிப்பு நிகழ்வில் இவ்வருடம் பல்கலைக் கழக அனுமதிபெற்ற மாணவி க.சுதர்சினி, ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற அ. பிரபாகரன், த. தர்சிகா, கு.உலகேஸ்வரன் மற்றும் மாகாண மட்ட தமிழ்தினப்போட்டியில் கவிதை ஆக்கத்தில் இரண்டாம் இடத்தை பெற்ற ந.கோகுலவாணி ஆகியோர் உட்பட மாணவ, மாணவியர் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளனர். (ஒ-88)

# பறித்த இளநீர் முகத்தில் வீழ்ந்து ஒருவர் காயம்!

தென்மராட்சி,ஒக்.10

கொக்கைத்தடியினால் இழுக்கப்பட்ட செவ்விளநீர் தேங்காய் பறித்தவரின் முகத்தில் வீழ்ந்து காயப்படுத்தியது.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் மீசாலை கிழக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவசம்பு பாலச்சந்திரன் (வயது 55) என்பவர் இதில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-117)


## வேலைக்கு ஆள் தேவை

Screen Printing வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புகளுக்கு:
**லக்கி பிறிண்டேர்ஸ்**
507, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 8046
(41208) (54-34-12)

## NEW M.T.C

54/B, பருத்தித்துறை வீதி, யாழ்.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்று அல்லது சுயதொழில் வாய்ப்பின்மூலம் மாதாந்தம்,

ரூபா 20,000/= - 50,000/= வரை வருமானம் பெறக்கூடிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்: 15.10.2005 பயிற்சி முடிவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விவரம் அறிய 0779 172352 - நிர்வாகி.
(41207) (54-34-12)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:
(41195) (54-34-12)

வேலணை வைத்திய கலாநிதி
**சி. இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 222 2459

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

*இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு*
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை** (நில்ஸ்) இன்று மட்டும் 7-9.30
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30,

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது.

சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
**சாணக்யா**
காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30,

**ராஜா** யாழ்ப்பாணம்

*இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு*
*சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த*
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30,
*(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)*

**மனோகரா** யாழ்ப்பாணம்

இன்றுமுதல் இளையதளபதி விஜய், ஜோதிகா, விவேக் நடித்த
**திருமலை**
11.10.05 முதல் பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த
துண்டக்க மண்டக்க...
காட்சிநேரம்:- 10.30, 2.30 6.30, 9.30, (பு.நே.)
(# 44110)


# இரு மாணவருக்கு விஷ ஜந்துக்கடி

தென்மராட்சி,ஒக்.10

பாடசாலைக்குப் புறப்பட்ட இரு மாணவர்கள் விஷ ஜந்துக்களால் கடியுண்ட சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

பாடசாலை செல்வதற்காக அணிந்த சப்பாத்துக்குள்ளிருந்த விஷ ஜந்து கடித்ததில் சாவகச்சேரி கிராம்புவிலைச் சேர்ந்த வரதராசா சுலக்ஸணன் (வயது 11) என்வரும் -

புத்தகப் பைக்குள் இருந்த விஷ ஜந்துவினால் கடியுண்ட மீசாலை மேற்கைச் சேர்ந்த சதாசிவம் மகிழ்வாணி (வயது 15) என்பவரும் - சாவகச்சேரி மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டனர்.

(ஒ-117)


**பொருளியற் கல்லூரி** -யாழ்ப்பாணம்

**A/L Day Class**
தமிழ்-மீரா
பிரிவு-I சனி, ஞாயிறு 1-2
பிரிவு -II செவ், புதன், வெள்ளி 7-8
நடைபெறுகின்றன.
சகல பிரிவுகளுக்கும் வழங்கப்படும்.
1) மாதிரி வினா விடைப் புத்தகங்கள்
2) கையேடுகள்
3) குறிப்புகள்
4) அலகு ரீதியான பரீட்சைகள்

**BARATHY-** சித்தன்கேணி

விஜயதசமி நன்நாளில்
2006 ஆம் ஆண்டிற்கான
தரம்-5 புலமைப் பரிசில் வகுப்புகள்
ஆரம்பம்: 12-10-2005 புதன் 4 மணி.
ஆசிரியர்-திரு. கலாமோகன்.
அனுமதியினை முன்கூட்டிப் பெற்றுக் கொள்ளவும்.
கடந்த காலங்களில் எமது நிறுவனத்தில் இவ் ஆசிரியரிடம் கற்ற மாணவர்கள் திறமைச் சித்தி பெற்றதை நீங்கள் அறிவீர்கள்.
(41209)


## கண்ணீர் அஞ்சலி

எமது சபை சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்
திரு. உதயகுமார் அவர்களுடைய மாமனார்
**அப்பாரெத்தினம் சண்முகநாதன்**
*அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவரின் பிரிவால் துயரமுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.*

(41202) (54-34-12)
செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
தீவுகள் தெற்கு பிரதேச சபை, வேலணை.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லம்மா இராசையா (சின்னத்தங்கச்சி)



தாவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவு கொண்டவரும் கனடாவில் வசித் தவருமாகிய நல்லம்மா இராசையா அவர்கள் கனடா ரொறொன்டோவில் 07.10.2005 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சுப்பிரமணியம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் பாக்கியலட்சுமி (கந்தர்மடம்), பரமேஸ்வரன் (கனடா), மகேஸ்வரன் (பபா-கட்டப்பிராய்), ராஜேஸ்வரன் (ராசு - ஈச்சமோட்டை), விக்னேஸ்வரன் (கனடா), கமலேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரன் (கனடா), இந்திரேஸ்வரன் (தாவடி), ஈஸ்வரன் (கனடா), பாலேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நடராஜா (கந்தர்மடம்), ஜெயந்தி (கனடா), மங்கையர்க்கரசி, கோமதிதேவி, லீலாவதி (கனடா), ஜெயந்தி (கனடா), தயா (கனடா), றஞ்சினி, சுகந்தி (கனடா), ஆனந்தசேகரம் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் பூரணலட்சுமி, மனோன்மணி (கனடா), காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சின்னத்துரை, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.10.2005) செவ்வாய்க் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனடா. ஈசன். T.P: 001-9055025171
(41201) (54-34-12)
தகவல்:- மகேஸ்வரன், ராஜேஸ்வரன் (சுருடா கூல்பார், நவீனசந்தை உட்புறம், யாழ்.)
இந்திரேஸ்வரன் (லக்ஷிகா ரெக்ஸ், 51, நவீனசந்தை உட்புறம், யாழ்.)
மானிப்பாய் வீதி, தாவடி, கொக்குவில்.

### திருமதி தவபாக்கியம் பொன்னையா

கொற்றாவத்தை, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவபாக்கியம் பொன்னையா அவர்கள் நேற்று (09.10.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமுபிள்ளை -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு -அபிராமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசு பொன்னையாவின் அன்பு மனைவியும், கணேஷலிங்கம் (Ex Manager, Ceylon Hotel Corparation Ex. Staff Ministery of defence oman. Presently at Pillayar in Jaffna) அமரர் சிவலிங்கம் (Ceylon petrolium Corparation Supplies of Function) சண்முகலிங்கம் (காந்தி) (Store Restuarant Nelliyadi) பச்சையம்மா (வளர்ப்பு மகள்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவமணி தேவி (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்), கிருஷ்ணவேணி (India) சிவனருட்செல்வி, விஜயலட்சுமி, சிவபாலன் (கனடா) பரமநாதன் (கொழும்பு), கருணாமூர்த்தி (பிரான்ஸ்), ஈஸ்வரன் (ஜேர்மனி) இரகுராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியுமாவர். ஹர்சினி (மருத்துவபீடம்) பாமினி, வைகுந்தன், சித்திரா, உஷித்தா, பாமதி ஆகியோரின் பேர்த்தியும் அமரர் குருசாமி , அமரர் சிவப்பிரகாசம், அமரர் சின்னத்தம்பி மற்றும் சோமாஸ்கந்தராஜா (Ex Lead Factory Officer, SPC matale) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர்சி. புவனேஸ்வரி, சோ. புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2005) திங்கட் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.*
T. P.: 077 - 6141208
T. P.: 021 -226 3758
(41197) (54-34-12)
தகவல்
ப. சோமாஸ்கந்தராஜா (சகோதரன்).

# இலங்கையரின் பிணை மனுவை நிராகரித்தது சென்னை நீதிமன்று

மதுரை, ஒக். 10

தனது பிள்ளைகளைச் சட்டவிரோதமாக ஜேர்மனியில் இருந்து இலங்கைக்குக் கொண்டு செல்ல முயன்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இலங்கையர் ஒருவருக்கு சென்னை மேல் நீதிமன்றம் பிணை வழங்க மறுத்துள்ளது.

கிருஷ்ண முரளி என்று அழைக்கப்படும் ஜெனராஜன் என்ற நபரின் பிணை மனுவே நிராகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையைச் சேர்ந்தவரான இவர் ஜேர்மனியில் வசித்து வருகின்றார். தனது இரு புதல்விகளுடனும் இந்தியா வந்த அவர் அவர்களைத் தனது பெற்றோரின் வீட்டில் தங்க வைத்துவிட்டுத் தான் இரண்டாவது திருமணம் செய்து கொண்டுள்ளார்.

எனினும், அவரிடம் இந்தியா வருவதற்கான வீஸா இருக்கவில்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர். அவர் இரண்டாவதாகத் திருமணம் செய்து கொண்ட பெண்ணும் ஜேர்மனியில் வசிக்கும் இலங்கையரே.

தனது புது மனைவியுடனும் இரு புதல்விகளுடனும் கடல் வழியாக இவர் இலங்கைக்கு வர முயன்ற சமயம் ராமேஸ்வரம், பாம்பன் என்ற இடத்தில் அவர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அத்துடன் அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

அவரது முதலாவது மனைவி தனது பிள்ளைகளைத் தேடி இலங்கை சென்றுள்ளார். அத்துடன் தந்தையிடம் இருந்து தனது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு கோரி அவர் சென்னை மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்றையும் தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள கிருஷ்ண முரளி தன்னை பிணையில் விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்திருந்த மனு, நீதிபதி ரி.வி.மாசிலாமணி முன்பாக நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபருக்குப் பிணை வழங்கினால் அவர் நீதிமன்றத்திற்கு வரமாட்டார் - தப்பிச் சென்று விடுவார் - என்று அரச தரப்பு சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

ஆனால், இந்தியாவில் தங்கி நிற்பதற்கான ஆவணங்கள் இல்லாத ஒருவரை இவ்வாறு தடுத்து வைத்திருப்பது முறையல்ல என்று கிருஷ்ண முரளி தரப்பு சட்டத்தரணி வாதிட்டார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி இறுதியில் பிணை மனுவை நிராகரித்தார். சந்தேகநபரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்திருக்குமாறு உத்தரவிட்டார். (ஒ)

## தபால் வாக்களிப்பு: இறுதித்தினம் இன்று

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி இன்று திங்கட்கிழமையுடன் நிறைவடைய உள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

தமது சொந்த வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க முடியாத இடம்பெயர்ந்தவர்கள் வேறு மாற்று வாக்குச்சாவடிகளில் வாக்காளிப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதியும் இன்றுடன் முடிவடையவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

## சுப்பர் சீரிஸ் கிரிக்கெட் ஆஸி. அணி வெற்றி

உலக லெவன் அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்கும் இடையிலான சுப்பர்சீரிஸ் கிரிக்கெட் தொடரில் நேற்று இடம்பெற்ற 3ஆவது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 156 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஆஸ்திரேலியா 5 விக்கெட் இழப்பிற்கு 293 ஓட்டங்கள் எடுத்தது. 27.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த உலகலெவன் அணி 137 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. (ஒ)

## தமிழ்க் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- என்றார்.

கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதிலிருந்து கூட்டமைப்பிற்கென தலைமை அலுவலகம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பதில் தீவிரம் காட்டப்பட்டு வந்தது. எனினும், அந்த முயற்சி இப்போது தான் சாத்தியமாகியுள்ளது.

''மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கும் வன்னி, யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கும் மத்தியில் திருகோணமலை மாவட்டம் அமைந்துள்ளதன் காரணத்தாலேயே தலைமைக் காரியாலயத்தை அமைக்கத் திருகோணமலையைத் தெரிவு செய்தோம்'' - என ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கூறினார். (க)

## வீரவன்ச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்ய உத்தரவிடவேண்டும் எனக் கோரி சமாதான ஆர்வலரும், சகவாழ்வு மன்ற ஸ்தாபகருமான குமார் ரூபசிங்க மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றைத்தாக்கல் செய்திருந்தார்.

தேசிய சொத்துகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் குற்றவியல் தண்டனைகள் கோவைச் சட்டம் என்பனவற்றின் அடிப்படையில் விமல் வீரவன்ஸவைக் கைது செய்யும்படி பொலீஸ்மா அதிபருக்கு நீதிமன்றம் உத்தர விடவேண்டும். என அவர் தனது மனுவில் கோரி இருந்தார்.

இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (க)

## 2ஆம் லெப்.மாலதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள இடத்திலும் -

மல்லாவியில் பிற்பகல் 4.30 மணிக்கு மாவீரர் மண்டபத்திலிருந்து நினைவு ஊர்வலம் புறப்பட்டு, யோகபுரம் மகாவித்தியாலய மைதானத்தைச் சென்றடைந்து அங்கும் - மாவீரர் மாலதி நினைவுநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, மகளிர் எழுச்சி தினத்தையொட்டி கருத்தரங்குகள், மகளிர் மேம்பாட்டு செயற்பாடுகளென பல்வேறு நிகழ்வுகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. பளை பொது மைதானத்தில் இன்று பிற்பகல் 5.30 மணிக்கு பெண்கள் மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் எழுச்சி நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஒ-72)

## புலிகள் விவகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் குறித்து ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றிய சபை இன்னும் இரண்டு வாரங்களில் மீண்டும் கூடவிருக்கின்றது என்ற செய்தி வெளியாகியிருக்கின்றது.

இலங்கையில் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் வன்முறைகள் மற்றும் கொலைகளுக்கான குற்றச்சாட்டை வேண்டுமென்றே புலிகள் மீது சுமத்தி, புலிகளுக்குக் கெட்டபெயரை ஏற்படுத்தி, அரசியல் வஞ்சம் தீர்க்கும் திட்டமிட்ட சதிச் செயற்பாடு அரங்கேறுவதாகப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ள பின்னணியில் -

புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கையும் கூட ஒருதலைப்பட்சமானது என்ற குற்றச்சாட்டு சர்வதேச மட்டத்திலும் முன்வைக்கப்படுகின்றது. இலங்கை அரசின் பரப்புரைகளுக்கு - பசப்புரைகளுக்கு - எடுபட்ட ஒரு சில ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இலங்கை அரசு குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களை பூதாகரமாக்கி பிரசாரப்படுத்தியதன் விளைவே புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றிய அறிக்கை என்ற கருத்து நிலைப்பாடு சில இராஜதந்திர வட்டாரங்களில் உள்ளது எனத் தெரிகிறது.

எனவே, இலங்கையின் உண்மைநிலைமை குறித்து நடுநிலைத் தன்மையுடைய சர்வதேசப் பார்வையாளர்கள் ஊடாக சுயாதீனமான - சுதந்திரமான - அறிக்கைகளைப் பெற்று, அவற்றை ஆதாரமாகக் கொண்டு மேல்நடவடிக்கைகள் குறித்து ஆராயலாம் என்ற எண்ணம் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் இராஜதந்திரிகள் மட்டத்தில் உருவாகியுள்ளது என்றும் -

இதன்மூலம் ஐரோப்பிய ஒன்றியம் பக்கச் சார்பின்றிச் செயற்படுகின்றது என்பதை நிரூபிக்கலாம் என அந்த இராஜதந்திரிகள் கருதுகின்றனர் என்றும் - கூறப்படுகின்றது.

இதற்காக, சர்வதேச மன்னிப்புச்சபை, 'ஹியூமன் ரைட்ஸ் வோச்', 'த இன்டர் நஷனல் பெடரேஷன் டெரி டெஸ் ஹோம்மஸ், சர்வதேச சிறுவர் பாதுகாப்பு இயக்கம், ஜுயிஸ்ட் அகதிகள் சேவை நிறுவனம், ஜெனீவாவில் உள்ள ஐ.நா.குவாக்கர் அலுவலகம் ஆகியவற்றின் உதவியை நாடத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இது போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகளை ஐரோப்பிய ஒன்றியம் தனது விசேட பார்வையாளர்களாக அனுப்பி, அவர்களின் சுயாதீன அறிக்கைகளின் அடிப்படையில் எதிர்காலத் தீர்மானங்களை எடுக்கும் என்று கூறப்பட்டது. (க)

## அமைச்சுப் பதவிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதென இ.தொ.கா. தீர்மானித்ததைத் தொடர்ந்து அமைச்சரவையில் தாம் வகிக்கும் பதவிகளை ராஜினாமாச் செய்வதென அக்கட்சித் தலைமை முடிவுசெய்தது. ஆனால், இ.தொ.காவின் உபதலைவர்களில் ஒருவரான பைசல் முஸ்தபா கட்சியின் முடிவை நிராகரித்துவிட்டார்.

இ.தொ.கா. தலைவரும், சகாக்களும் இன்று ஜனாதிபதியை சந்தித்து தமது ராஜினாமாக்களைச் சமர்ப்பிக்கவுள்ள நிலையில், பைசல் முஸ்தபா நேற்றுமாலை வெளிநாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். அவர் வெளிநாடு செல்வதற்குமுன் இது தொடர்பாக அவருடன் தொடர்புகொண்டபோது, ''தலைவர்கள் தமது சுயநலத்திற்காக அடிக்கடி கட்சிமாறும்போது எனது சமூகத்திற்காக நான் எனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்வதில் என்ன தவறு?'' என்று கேள்வி எழுப்பினார்.

2002ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ.தே.கவுடன் இணைந்து யானை சின்னத்தில் போட்டியிட்டது இ.தொ.கா. 6 ஆசனங்களையும் தேசியப் பட்டியலில் இரண்டு ஆசனங்களை வென்றதுடன் இ.தொ.கா.வினர் 8 பேர் நாடாளுமன்றம் சென்றனர்.

பின்னர் ஒரு அமைச்சுப் பதவியையும், இரண்டு பிரதி அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக்கொண்டு அரசின் பக்கம் தாவியது இ.தொ.கா. நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் ஐ.தே.கவின் பக்கம் மாறி அக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது. அவருக்கு ஆதரவாக தீவிர பிரசாரத்திலும் குதித்துள்ளது.

இதனை அடுத்து மத்திய அரசில் தாம் வகித்துவந்த அமைச்சுப் பதவிகளை அக்கட்சியினர் இராஜினாமாச் செய்கின்றபோதும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் சச்சிதானந்தன் அப்பதவியை இராஜினாமாச் செய்யமாட்டார் என்று கட்சி வட்டாரங்கள் கூறின.

மத்திய மாகாண அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன், சபைத் தலைவர் துரை மதியுகராஜா, சப்பிரகமுவ மாகாணசபை உபதலைவர் ஏ.எம்.டி. இராஜன் ஆகியோரும் தொடர்ந்தும் அந்தப் பதவிகளில் இருப்பர். அவை தொடர்பாகப் பின்னர் முடிவு செய்யப்படும் என இ.தொ.கா. வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தின் 15ஆம் பிரிவின்படி தேர்தல் அத்துமீறலாகும் என்று பொலீஸார் கூறுகின்றனர்.

இச்சட்டத்தின்படி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் தலா ஒரு மத்திய தேர்தல் பிரசார அலுவலகத்தையும் தேர்தல் தொகுதிகளில் தலா ஒரு தேர்தல் பிரசாரக் கிளை அலுவலகத்தையும் அமைக்கமுடியும். இவ்வாறு திறக்கப்படும் அலுவலகங்கள் தொடர்பான முழு விவரங்களை யும் ஜனாதிபதி வேட்பாளர்கள் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கவேண்டும். இதனை ஒவ்வொரு வேட்பாளரும் கண்டிப்பாகக் கடைபிடிக்கவேண்டும்.

''ஒரு வேட்பாளரை எத்தனை அரசியல் கட்சிகளும் ஆதரிக்கலாம். ஆனால், அவை ஒவ்வொன்றும் தனித்தனியான தேர்தல் பிரசார அலுவலகங்களை ஜனாதிபதித் தேர்தலின் போது அமைக்க முடியாது. இந்த விதிகளை மீறும் வகையில் ஜே.வி.பி.யினர் - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவு[illegible] ஆதரவு திரட்டும் நோக்கில் - நாட்டின் பல பாகங்களிலும் தமது கட்சியின் கிளை அலுவலகங்களைத் திறந்துள்ளனர். இது ஒரு தேர்தல் அத்துமீறலாகவே கருதப்படும்''- எனப் பொலீஸார் கூறுகின்றனர்.

எனவே, இவ்வாறு திறக்கப்பட்ட ஜே.வி. பி. தேர்தல் அலுவலகங்கள் அனைத்தையும் மூடிவிடும்படி பொலீஸ் மாஅதிபர் சந்திரா பெர்னாண்டோ ஜே.வி.பிக்கு அறிவித்துள்ளார். தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளார். (க)

## இயன் மார்ட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தால் பாதிக்கப்பட்ட நாவலடி, திருச்செந்தூர், டச்பார், கல்லடி மற்றும் உப்போடை ஆகிய பகுதிகளுக்குச்சென்று அப்பகுதிகளின் அழிவுகளைப் பார்வையிட்டதோடு அப்பகுதி மக்களுடனும் உரையாடினார்.

பின்னர், யுனிசெவ் நிறுவனத்தின் மாவட்டக் காரியாலயத்திற்குச் சென்று அங்குள்ள அதிகாரிகளுடனுன் உரையாடினார். மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியில் மாவட்ட சமாதானக் குழுத் தலைவர் வணக்கத்துக்குரிய பிதா மில்லரின் தலைமையில்இடம்பெற்ற சந்திப்பு நிகழ்வில் மாவட்ட சமாதானக் குழுப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினார்.

இறுதியாகப் பிற்பகல் 4 மணிக்கு காத்தான்குடிக்கு விஜயம்செய்து அங்கு காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். (க)

NEW SCIENCE CENTRE
இரசாயனவியல் கருத்தரங்கு
சேதன தாக்கப் பொறிநுட்பங்கள்
12-10-2005 புதன் 9.30 A.m.
இக் கருத்தரங்குடன் கருத்தரங்கு அனுமதி நிறுத்தப்படுகிறது.
அயன் சமனிலை
Sat.,Sun. 11-12
BY:- அன்பழகன் B.sc. (41180)

CHEMISTRY CENTRE
Temple Road(Green park முன்பாக)
A/L 2007
INORGANIC CHEMISTRY
ஆரம்பம்-12.10.2005 Wed. 5.p.m.
(41179) BY:.அன்பழகன். B.sc.

விற்பனைக்கு
எம்மிடம் சொனி (T.V) வகைகள், (CD) கொப்பி வகைகள், கொனிகா பிலிம்ரோல் வகைகள், (FUJI) பிலிம்ரோல் வகைகள் மற்றும் துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள், (D.S.I) டயர் டியூப் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
சிறி மாதவன்
97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P:. 021 6365
(40989)

பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இ.சாந்தகுமார்
(B.A. Hind Spl.)
06.10.2005 அன்று யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின்போது (B.A.Hind.Spl) பட்டம் பெற்றுக்கொண்ட இராசரத்தினம் சாந்தகுமார் அவர்களை அகமகிழ வாழ்த்துவதுடன் இவர் மேலும் பல பட்டங்களையும் பெற்று வளமுடன் வாழவேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.
மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றமும்,
மாவைபாரதி சனசமூக நிலையமும்
மாவிட்டபுரம்.

IIS
புலமைப்பரிசில் திட்டம் 2006
மாணவர்களே! நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த எமது அடுத்த கல்வியாண்டிற்குரிய புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் விஜயதசமி தினத்தன்று (12.10.2005) புதன்கிழமை முதல் ஏற்றுக்கொள்ளப்படும்.
அன்றைய தினம் பதிவினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பதிவுக்கட்டணத்தில் விசேட சலுகை வழங்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு 12.10.2005 உதயன் பத்திரிகையை எதிர்பாருங்கள்.
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.